# வானவில்

# VAANAVIL

இதழ் 116 | ஆவணி 2020

ISSUE 116 | AUGUST 2020


# மாகாண சபைகளுக்கான தேர்தல் உடன் நடத்தப்பட வேண்டும்!

**2020** ஓகஸ்ட் 05ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலைத் தொடர்ந்து இலங்கையில் ராஜபக்சாக்கள் தலைமையிலான மிகவும் பலம் வாய்ந்த அரசாங்கம் ஒன்று ஏற்பட்டுள்ளது. இப்படியான ஒரு பலமான அரசாங்கம் அமையும் என இலங்கை மக்கள் முன்கூட்டியே எதிர்பார்த்திருந்தாலும், ராஜபக்சாக்கள் இவ்வளவு பெரிய வெற்றியை ஈட்டுவார்கள் என மேற்கு நாடுகள் ஏன் அயல் நாடான இந்தியா கூட எதிர்பார்த்திருக்கவில்லை.

2015இல் மேற்கு நாடுகள் முன்னின்று இலங்கையில் ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்தும் வரை, மகிந்த ராஜபக்ச தலைமையில் இருந்த அரசுக்கெதிராக சர்வதேச அரங்கில் பலவிதமான பாரதூரமான குற்றச்சாட்டுகளை சுமத்தி வந்ததுடன், அதன் அடிப்படையில் தன்னிச்சையாக நடவடிக்கை எடுப்பதில் முனைப்பும் காட்டின. அவற்றின் அந்த செயல்பாடுகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் ஆதரவும் வழங்கின.

2015இல் ஐ.தே.க. தலைமையில் அமைந்த அரசுக்கு மேற்கு நாடுகள் தமது பூரண ஆதரவை வழங்கியதுடன், தமிழ் தேசியக் கூட்டமைப்பும் நிபந்தனையற்ற ஆதரவு வழங்கியது. ஆனால் மேற்கு நாடுகளின் செயல்பாடுகளையும், ஐ.தே.க. தலைமையிலான நான்கரை ஆண்டுகால ஆட்சியையும் இலங்கை மக்கள் ஏற்கவில்லை என்பதை கடந்த வருடம் நொவம்பரில் நடந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவும், இவ்வாண்டு ஓகஸ்ட்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் முடிவும் எடுத்துக் காட்டிவிட்டன.

அதேபோல ஐ.தே.க. ஆட்சிக் காலத்தின் போது தமிழ் தேசியக் கூட்டமைப்பு அந்த அரசுடன் கூடிக்குலாவி வந்ததை தமிழ் மக்களும் ஏற்கவில்லை என்பதையும் இந்தத் தேர்தல் முடிவு எடுத்துக் காட்டிவிட்டது.



இத்தகைய ஒரு சூழ்நிலையில் இலங்கை மக்கள் அளித்த தேர்தல் தீர்ப்புகளை ஏற்றுக்கொண்டு மேற்கு நாடுகள் அமைதியாக இருப்பார்கள் என எதிர்பார்க்க முடியாது. அதேபோல ஐ.தே.கவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் வாளாவிருப்பார்கள் எனவும் எதிர்பார்க்க முடியாது.

குறிப்பாக, ராஜபக்சாக்கள் அரசு சீனாவுக்கு சார்பானது என்ற கருத்து மேற்கு நாடுகளிடமும் இந்தியாவிடமும் எப்போதும் உண்டு. எனவே அதை வைத்துக்கொண்டு மேற்கு நாடுகள் ராஜபக்சாக்கள் அரசுக்குத் தொல்லை கொடுப்பதற்காக ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் மீண்டும் ‘போர்க்குற்றம்’ சம்பந்தமான பிரச்சினையைக் கிளற முற்படலாம். மனித உரிமைப் பிரச்சினையை கையில் எடுக்கலாம். எனவே இலங்கை அரசு தனது அயலுறவு கொள்கையில் அவதானமாகச் செயல்படுவது அவசியமானது. அணிசேராக் கொள்கையை உறுதியாகக்

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

**நூறு சிந்தனை மலரட்டும்**

# முடிவற்ற அரசியலமைப்புத் திருத்தங்களும் தீராத பிரச்சனைகளும்

**1978** செப்டம்பர் 7 இல் அறிவிக்கப்பட்ட இலங்கையின் புதிய அரசமைப்புச் சட்டத்தில் இன்னுமொரு திருத்தத்தை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளில், புதிய அரசாங்கம் அவசர அவசரமாக களமிறங்கியுள்ளது. மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சி நிறுவப்பட்டு, நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு இடம்பெறுவதற்கு முன்னரே, 19ஆவது திருத்தத்தை நீக்கும் உத்தேச 20ஆவது திருத்தச் சட்டமூலத்தைத் தயாரிப்பதற்கான அமைச்சரவை அனுமதி பெறப்பட்டுள்ளது.

ஒவ்வொரு நாட்டிற்கும் அரசியலமைப்பு என்பது அனைத்துச் சட்டங்களுக்கும் அடிப்படையானது. ஏனெனில் அதுவே முழுமையாக ஒரு அரசினை செயற்படுத்தும் கருவியாக இருப்பதோடு, ஒவ்வொரு அரசும் முழு நாட்டையும் ஆட்சி செய்வதற்கு ஏற்றவகையில் ஒற்றையாட்சி அல்லது சமஷ்டியாட்சி அரசியலமைப்பாகவும் அமைந்துள்ளது. இதன்படி இலங்கையில் இதுவரையில் ஏற்படுத்தப்பட்ட சகல அரசியலமைப்புகளும் திருத்தங்களும் ஒற்றையாட்சித் தன்மையையே கொண்டுள்ளன.

இலங்கை ஏறத்தாள 450 வருட காலம் காலனியாதிக்கத்திற்கு உட்பட்டு இருந்தது. இதில் 150 வருடங்கள் பிரித்தானியாவின் கீழ் இருந்தது. பிரித்தானியா ஆட்சி செய்த காலத்தில் இலங்கையில் முறையே 1833, 1910, 1921, 1924, 1931, 1947 ஆண்டுகளில் பல்வேறு அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் முன்வைக்கப்பட்டன. 1931 இல் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பு டொனமூர் அரசியலமைப்பு எனப்படுகின்றது. இறுதியாக 1947 இல் சோல்பரி அரசியலமைப்பை அடிப்படையாகக் கொண்டு சுதந்திரத்தை வழங்குவதற்காக இலங்கைச் சுதந்திரச் சட்டம் அமுலுக்கு வந்தது.

பிரித்தானியப் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டு 1947ஆம் ஆண்டு டிசம்பர் 3 ஆம் திகதி இலங்கைப் பாராளுமன்றத்தின் முன்வைக்கப்பட்ட சோல்பரி அரசியலமைப்பினால், 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி 4 ஆம் திகதி முதல் இலங்கை சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இச்சட்ட மூலம் இலங்கை தொடர்பாகப் பிரித்தானியப் பாராளுமன்றம் பெற்றிருந்த ஆணையிடும் சட்டங்களைப் பிறப்பிக்கும் அதிகாரங்கள் இழக்கப்பட்டன, அதேவேளை இலங்கைப் பாராளுமன்றத்தின் சட்டமியற்றும் அதிகாரங்கள் விரிவாக்கப்பட்டன.

இலங்கை சுதந்திரம் பெற்றதன் பின்னர் 1972 ஆம் ஆண்டு முதலாவது குடியரசு அரசியலமைப்பும், அதன் பின்னர் 1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியலமைப்பும் அப்போதைய ஆட்சியாளர்களான ஸ்ரீல.சு.க வாலும் ஐ.தே.க வாலும் கொண்டு வரப்பட்டன. இவ்வாறு 1978 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இலங்கையின் அரசியலமைப்பு இன்றுவரையிலும் இலங்கையில் நடைமுறையில் இருந்தாலும், இது இன்னமும் பல்வேறு குறைபாடுகளையும் நெருக்கடிகளையும் கொண்ட அரசியலமைப்பாகவே காணப்படுகின்றது. அதனால் 1979 பெப்ரவரியில் முதலாவது திருத்தத்துடன் ஆரம்பித்த தற்போதைய அரசிலமைப்பு, 2015 இல் 19வது திருத்தத்தைக் கண்டுள்ளது. இதில் 1987 இல் 13வது திருத்தச்சட்டம், இலங்கை – இந்திய ஒப்பந்தம் மூலம் ஏற்படுத்தப்பட்டு, இலங்கையில் மாகாணசபை ஆட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

இறுதியாகக் கொண்டுவரப்பட்டது 19வது திருத்தச்சட்டம். இது 18ஆவது திருத்தத்தின் மூலம் கொண்டு வரப்பட்ட ஜனாதிபதி ஒருவர் எத்தனை தடவையும் பதவி வகிக்கலாம் என்பதை செயலற்றதாக்கி, மீண்டும் இரண்டு பதவிக் காலங்களுக்கு மட்டுமே ஜனாதிபதி ஒருவர் பதவி வகிக்க முடியுமென 1978 இன் பழைய ஏற்பாடுகளை மீளக் கொண்டு வந்துள்ளது. மேலும் இத்திருத்தம் ஜனாதிபதியின் பதவிக்காலத்தைக் குறைத்ததோடு, நாடாளுமன்றத்தைக் கலைப்பதிலும் கட்டுப்பாடுகளை விதித்தது. எனினும் 19ஆவது திருத்தம் ஜனாதிபதியின் அதிகாரங்களைப் பெரிதளவில் குறைத்திருக்கின்றது என்று சொல்ல முடியாது.

19ஆவது திருத்தத்தின் முதல் வரைபுகளில் ஜனாதிபதியின் சில அதிகாரங்களைப் பிரதமர் பிரயோகிப்பதற்கான ஏற்பாடுகள் சேர்க்கப்பட்டிருந்தன. ஆனால், இவற்றை நிறைவேற்றுவதற்கு பொதுசன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று இலங்கை உயர் நீதிமன்றம் தீர்பளித்திருந்ததால், இந்தப் பிரிவுகளும் இறுதியில் திருத்தத்தில் இடம்பெறவில்லை. இதுதவிர, 17ஆவது திருத்தம் மூலம் கொண்டு வரப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்களை ஸ்தாபித்தல் என்பதனை நடைமுறைப்படுத்தும் வகையிலான சரத்துக்கள், 19ஆவது திருத்தத்திலேயே உள்வாங்கப்பட்டன.

‘நல்லாட்சி’ என்று அழைக்கப்பட்ட கடந்த ஆட்சியில், ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு எதிரானதாகவே 19ஆவது திருத்தத்தில் சில விடயங்கள் உள்ளடக்கப்பட்டதென்ற பரவலான அபிப்ராயம் நிலவுகின்றது என்பதை மறுக்க முடியாது. பொதுஜன பெரமுன பதவிக்கு வந்தால், 19வது திருத்தம் இரத்துச் செய்யப்பட்டு, 20வது திருத்தம் கொண்டு வரப்படும் என்பதை தேர்தல் பரப்புரையாக முன்வைத்தே தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வந்துள்ளது.

சுதந்திரமடைந்ததிலிருந்து இலங்கையின் அரசியலின் கணிசமான பகுதி, புதிய அரசியலமைப்புகள் மற்றும் திருத்தங்கள் தொடர்பில் விவாதிப்பதிலும், ஏட்டிக்குப் போட்டியாக அவற்றினை உருவாக்குவதிலேயுமே கழிந்துள்ளது. அரசியலமைப்பின் உருவாக்கங்களின் போதும், பின்னர் ஏற்படுத்தப்படுகின்ற திருத்தங்களின் போதும், ஆட்சி புரிவதிலுள்ள பிரச்சினைகளே அடிப்படைக் காரணங்களாக உள்ளன என நியாயப்படுத்தப்பட்ட போதிலும், இந்த மாற்றங்களின் போது ஆளுங்கட்சிகளின் எதிர்கால நலன்களும் கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டன என்பதை மறுப்பதற்கில்லை. இதனால் செப்டெம்பர் மாத நடுப்பகுதியில், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்ற 20ஆவது திருத்தத்தில், தற்போதைய ஆட்சியாளர்கள் என்னென்ன விடயங்களில், தங்களுக்கு சார்பான மாற்றங்களை ஏற்படுத்தப்படுத்தப் போகின்றார்கள் என்ற கேள்வியும் எதிர்பார்ப்பும், பரவலாக எழுந்துள்ளது.

‘ஒரே நாடு, ஒரே சட்டம்’ என்று ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ முதலாவது பாராளுமன்ற அமர்வில் கூறியது நாட்டில் தற்பொழுது பலத்த சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. பல்லின மக்கள் வாழும் நாட்டில் ஒவ்வொரு சமூகமும் தனித்தனியாக தமது உரிமைகளை அனுபவித்து வந்த நிலை இதனால் இல்லாமல் போகிறது என்ற வாதம் ஒரு புறமும், நாட்டின் நலனுக்கு ஒரே சட்டம் இருப்பதே நன்மையானது என்ற எதிர்வாதம் மறுபுறமும் வைக்கப்படுகின்றது.

இலங்கையின் இனப்பிரச்சனை உட்பட ஏராளமான பிரச்சனைகள் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன. ஆனால் அவற்றிற்கு முன்னுரிமை கொடுக்காது, இலங்கையில் அதிகாரத்திற்கு வருபவர்கள் சட்ட திருத்தங்களிலேயே அதிக பிரயத்தனங்களை மேற்கொள்ளுகின்றனர். அப்படியிருந்தும், இலங்கையில் வாழும் சகல மக்களினதும் அபிலாசைகளையும் எண்ணங்களையும் நிவர்த்தி செய்யும் வகையிலான அரசியலமைப்பு ஒன்றினை உருவாக்கி நடைமுறைப்படுத்துவது என்பது இதுவரையில் தொடர்ந்தும் சாத்தியமற்றதொன்றாகவே இருந்து வருகின்றது என்பதே வரலாறாகவும் உள்ளது.

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com
‘வானவில்’ இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்:

வானவில்

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ **இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.**

# புதிய அரசாங்கத்துக்கும் தமிழர் தரப்புக்கும் முன்னால் உள்ள பொறுப்புக்கள்



ஓகஸ்ட் 05ஆம் திகதி நடைபெற்ற இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில் மகிந்த ராஜபக்ச தலைமையிலான பொதுஜன பெரமுன 145 உறுப்பினர்களைப் பெற்று அமோக வெற்றியீட்டியுள்ளது. மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறுவதற்கு 05 உறுப்பினர்கள் பற்றாக்குறையாக இருந்தபோதிலும் அரசுக்கு ஆதரவு வழங்கக்கூடிய வேறு சிறிய கட்சிகளின் உறுப்பினர்கள் சிலர் இருப்பதால் அரசுக்கு அதைப் பெறுவதில் எந்தச் சிக்கலும் இல்லை.

தற்போதைய அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருப்பதால் அது தான் விரும்பியதைச் சுலபமாக நிறைவேற்ற முடியும். அந்த வகையில் அரசு என்னென்ன நடவடிக்கைகளை எடுக்கப் போகின்றது என்பதுதான் தற்போதைய கேள்வி.

தற்போதைய அரசியலமைப்புக்கு 20ஆவது திருத்தம் ஒன்றைக் கொண்டு வருவதுதான் அரசாங்கத்தின் முதல் நோக்கமாகவும் நடவடிக்கையாகவும் இருக்கும் என கருதப்படுகிறது. பெரும்பாலும் செப்ரெம்பர் மாத நடுப்பகுதியில் 20ஆவது திருத்தம் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிகிறது.

20ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டதும் இயல்பாகவே முன்னைய 'நல்லாட்சி' அரசாங்கம் சமர்ப்பித்த 19ஆவது திருத்தம் செல்லுபடியற்றதாகிவிடும். அந்த திருத்தச் சட்டத்தை மகிந்த ராஜபக்சவும் அவரது கட்சியினரும் ஆரம்பித்தில் இருந்தே எதிர்த்து வந்துள்ளனர். குறிப்பாக அந்தத் திருத்தச் சட்டத்தின் மூலம் இரு தடவைகள் ஜனாதிபதியாக இருந்த ஒருவர் மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியாது என வரையறுக்கப் பட்டிருந்தது. அது 2015இல் மூன்றாவது தடவையாகவும் போட்டியிட்ட மகிந்த ராஜபக்சவை குறி வைத்தே கொண்டு வரப்பட்டிருந்தது.

ஆனால் தற்போது அரசாங்கம் கொண்டுவர உத்தேசித்துள்ள 20ஆவது திருத்தச் சட்டத்திலும் ஒருவர் இரு தடவைகளுக்கு மேல் ஜனாதிபதியாக இருக்க முடியாது என்ற சரத்து நீக்கப்படாமல் நீடிக்கும் என்று கூறப்படுகிறது. மகிந்த ராஜபக்சவே அந்த சரத்து நீடிப்பதை விரும்புகிறார் எனவும் கூறப்படுகிறது. அதற்கான காரணம் அவரது சகோதரரும் தற்போதைய ஜனாதிபதியுமான கோத்தபாய ராஜபக்ச இரு தடவைகளுக்கு மேல் ஜனாதிபதியாக நீடிப்பதை மகிந்த விரும்பவில்லை என்பது அரசியல் நோக்கர்கள் சிலரின் அபிப்பிராயம். கோத்தா இரு தடவைகளை நிறைவு செய்ததும் தனது புதல்வர் நாமல் ராஜபக்ச ஜனாதிபதியாவதற்கு கோத்தா வழிவிட வேண்டும் என்பது மகிந்தவின் கருத்து எனவும் அந்த நோக்கர்கள் கூறுகின்றனர். 'தாயும் பிள்ளையும் ஒன்றென்றாலும் வாயும் வயிறும் வேறல்லவா?' எனக் கூறப்படும் முதுமொழிதான் நினைவுக்கு வருகிறது.

## கே.மாணிக்கவாசகர்

இதுதவிர, முன்னைய அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்கள் சம்பந்தமான சரத்தும் அப்படியே நீடிக்கும் எனத் தெரிய வருகிறது. அப்படி நீடித்தால் அது நல்ல விடயமே.

அரசியல் அமைப்புத் திருத்தம் ஒருபுறமிருக்க, அரசாங்கம் எதிர்நோக்கும் முன்னுரிமை கொடுத்து செயல்பட வேண்டிய வேறு முக்கியமான பிரச்சினைகள் இருக்கின்றன. அதில் முதலாவது விடயம் சரிந்து போயுள்ள நாட்டின் பொருளாதாரத்தை சீர்செய்வதாகும்.

1977ஆம் ஆண்டுக்கு முன்னர் நாட்டின் பிரதான வருவாயாகவும், அந்நிய செலாவணியை ஈட்டித்தந்த பிரதான ஊற்றுமூலமாகவும் திகழ்ந்தது மலையக பெருந்தோட்டங்களில் உற்பத்தியான தேயிலை, இறப்பர், கோப்பி என்பனவே. அந்த நிலைமையை 1977இல் பதவிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் மாற்றியமைத்தது.

ஜே.ஆரின் ஆட்சியில் இலங்கையர்களுக்கு மத்திய கிழக்கு நாடுகளில் கிடைத்த வேலை வாய்ப்பும், புதிதாக உருவாக்கப்பட்ட சுதந்திர வர்த்தக நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்ட தைத்த ஆடைகளின் ஏற்றுமதியும் அந்நியச் செலாவணி தேட்டத்தில் பங்கு வகிக்க ஆரம்பித்தன. பின்னர் சந்திரிக மற்றும் மகிந்த ஆட்சிக் காலங்களில் சுற்றுலாத் துறையும் அதனுடன் சேர்ந்து கொண்டது. அத்துடன் யுத்தம் காரணமாக மேற்கு நாடுகளுக்கு புலம்பெயர்ந்தவர்கள் உறவுகளுக்கு அனுப்பும் பணமும், யுத்தம் முடிவுற்ற பின்னர் அவர்களது தாயக வரவும் இலங்கைக்கு கணிசமான அந்நியச் செலாவணியை ஈட்டிக் கொடுத்தது.

ஆனால் இந்த வருட முற்பகுதியில் உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட கொரோனா நோய் வைரசின் தாக்கம் இலங்கையையும் மோசமாகத் தாக்கியது. இந்த நோய் சீனாவில் முதன்முதலில் தோன்றியதால் அங்கிருந்து பெருமளவில் இலங்கைக்கு சுற்றுலா வந்த சீனர்களின் வருகை நின்று போனது. அந்த நோய் காரணமாக பெரும்பாலான விமான சேவைகள் நின்று போனதால் ஏனைய அந்நிய நாட்டவர்களும், புலம்பெயர் இலங்கையர்களும் இலங்கை செல்வது முற்றாக நின்று போனது. அதன் காரணமாக இலங்கையின் நிதி வருமானத்தில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

மறுபக்கத்தில் அரசாங்கத்தின் மேலதிக செலவீனங்கள் இக்காலகட்டத்தில் அதிகரித்துள்ளன. கொரோனா தடுப்புக்கான மருத்துவச் செலவுகள், பொதுமக்களுக்கு நிதி மற்றும் பொருள் உதவிகள் வழங்கியமை, தொழில் நிறுவனங்கள் இயங்காமல் போனமை, விவசாயம் முடங்கிப் போனது, கடல் தொழில் நொடித்துப் போனது என பல வகைகளில் அரசாங்கத்துக்கு பல வழிகளில் செலவு ஏற்பட்டது.

எனவே இந்த நிலைமையில் இருந்து விடுபட சரியான பொருளாதாரத் திட்டங்களை வகுத்து தேக்க நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான வழிவகைகளை அரசாங்கம் செய்ய வேண்டிய கடப்பாட்டில் இருக்கின்றது. ஐ.தே.க. செய்தது போல நாட்டின் வளங்களை மலிவு விலையில் அந்நியருக்குத் தாரைவார்த்தோ அல்லது வெளிநாடுகளிடமிருந்து அறா வட்டிக்கு மேலும் மேலும் கடன்களைப் பெற்றோ இதைச் செய்ய முடியாது. அப்படிச் செய்தால் அது கண்களை விற்று சித்திரம் வாங்கியதிற்குச் சமமானதாகும்.

இலங்கை போன்ற சிறிய, பொருளாதார வளம் குன்றிய நாடுகள் அந்நிய உதவி இன்றி தம்மை வளப்படுத்திக் கொள்வது சிக்கலானதுதான். ஆனால் அந்நிய உதவியை நாடுவதற்கு முதல் முதலில் தனது வளங்களைப் பயன்படுத்தி சொந்தக் காலில் எழுந்து நிற்பதற்கு முயற்சிக்க வேண்டும். அப்படிச் செய்வதற்கு இலங்கை போன்ற சின்னஞ்சிறு தீவு நாடான கியூபா கண்ணுக்கு முன்னே ஒரு உதாரணமாக இருக்கின்றது.

இலங்கை சிறந்த நில, நீர், கடல், வன வளம் கொண்ட நாடு. அரசாங்கம் சரியான முறையில் மக்களுக்கு உதவிகள் செய்து ஊக்குவித்தால் நாடு உணவில் தன்னிறைவு அடைவதுடன், உற்பத்தியாகும் மேலதிக உணவுப் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியையும் சம்பாதிக்க முடியும். அதேநேரத்தில் நாடு பரந்த ரீதியில் சிறிய – நடுத்தர கைத்தொழில்களை ஊக்குவிப்பதன் மூலம் சில பொருட்களை பெரும் பணச் செலவில் இறக்குமதி செய்வதையும் தவிர்க்கலாம்.

பொருளாதார விடயம் தவிர அரசாங்கம் முன்னுரிமை கொடுத்து செயல்பட வேண்டிய இன்னொரு முக்கியமான விடயம் சிறுபான்மை இனங்களின் உரிமைகளை வழங்கி அவர்களின் மனக்குறைகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகும். இந்த விடயத்தில் பதவியில் இருந்த அரசாங்கங்கள் தமிழர் தரப்புடன் கடந்த காலங்களில் செய்த பண்டா – செல்வா ஒப்பந்தம், டட்லி – செல்வா ஒப்பந்தம், ஜே.ஆர். – அமிர்தலிங்கம் ஒப்பந்தம், சந்திரிகவின் தீர்வுத் திட்டம் எதுவுமே நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதன் காரணமாகவே தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் உருவாகி நாட்டை பேரழிவுக்கு இட்டுச் சென்றது. அதிலிருந்து தற்போதைய அரசாங்கம் பாடம் படிப்பது அவசியமானது.

நடைமுறைப்படுத்தப்பட்ட ஒரேயொரு ஒப்பந்தம் இந்தியாவின் தலையீட்டால் 1987இல் செய்து கொள்ளப்பட்ட இந்திய – இலங்கை ஒப்பந்தமாகும். இந்த ஒப்பந்தத்தின் காரணமாகவே அரசியல் அமைப்பில் 13ஆவது திருத்தம் மேற்கொள்ளப்பட்டு மாகாண சபைகள் முறைமை நடைமுறைக்கு வந்தது. இந்த ஒப்பந்தத்தில் இலங்கை தமிழர் தரப்பில் யாரும் கைச்சாத்திடாத போதும், பல்வேறு தரப்பினரின் எதிர்ப்பையும் மீறி நடைமுறைப்படுத்தப்பட்டது. இன்று 13ஆவது திருத்தத்துக்கு பெரிய எதிர்ப்புகள் எதுவும் நாட்டில் இல்லை.

ஆனால் இந்த ஒப்பந்தம் இலங்கைத் தமிழர்களின் இனப் பிரச்சினைக்கு சரியான ஒரு தீர்வு அல்ல என்ற கருத்தும் தமிழர்கள் மத்தியில் இருக்கின்றது. அதேநேரத்தில் இந்த ஒப்பந்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாத நிலை குறித்து தமிழ் மக்கள் மத்தியில் அதிருப்தியும் இருக்கின்றது. இருப்பினும் இலங்கையின் யதார்த்த சூழல் சம்பந்தமான நிலையையும் கவனத்தில் எடுத்தாக வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கைத் தமிழர்களின் இனப் பிரச்சினைத் தீர்வு குறித்து பல்வேறு அரசியல் கட்சிகள் வெவ்வேறு ஆலோசனைகளை முன்வைத்துள்ளன. அவற்றுள் தமிழ் காங்கிரஸ் முன்வைத்த ஐம்பதுக்கு ஐம்பது, லங்கா சமசமாஜக் கட்சி முன்வைத்த சம அந்தஸ்து, கம்யூனிஸ்ட் கட்சி முன்வைத்த பிரதேச சுயாட்சி, தமிழரசுக் கட்சி முன்வைத்த சமஸ்டி, தமிழர் விடுதலைக் கூட்டணி முன்வைத்த தனித்தமிழ் ஈழம் என்பன அடங்கும். கட்சிகள் வெவ்வேறு ஆலோசனைகளை முன்வைத்தாலும் ஒப்பந்தங்கள் செய்யப்பட்ட போது பிராந்திய அடிப்படையை வைத்தே செய்யப்பட்டுள்ளன என்பதைக் கவனத்தில் எடுக்க வேண்டும்.

இன்று தனித்தமிழ் ஈழம் அமைப்பதற்கான சூழல் அறவே இல்லை. அதேபோல சமஸ்டி அரசியல் அமைப்பொன்றை ஏற்படுத்துவதற்கான சூழலும் இல்லை. ஒரேயொரு வாய்ப்பு வலுவான மத்திய அரசொன்றின் கீழ் பிராந்திய அடிப்படையில் அதிகாரங்களைப் பகிர்வதற்கான சூழலே நிலவுகின்றது. அப்படியான ஒரு நிலை இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் உருவான மாகாண சபை முறையில் உள்ளது. எனவே சரியான முறையில் அதை தமிழர் தரப்பு பயன்படுத்துவது குறித்து சிந்திப்பதே பொருத்தமானது.

இன்றைய அரசாங்கத்துக்கு எதிரான தரப்பில் அமர்ந்துள்ள பிரதான தமிழ் அரசியல் தரப்பும் சரி, அரசாங்கத்துடன் இணைந்துள்ள தமிழர் தரப்புகளும் சரி இந்த விடயத்தில் ஒரே கண்ணோட்டத்துடனும் கொள்கையுடனும் செயல்பட வேண்டும். எட்டாத கனியை ஒரே எட்டில் பறிக்க முயற்சிப்பதை விட, முதலில் மரத்தில் ஏறுவதற்கு முயற்சிக்க வேண்டும். அந்த வகையில் மாகாண சபைகளுக்கென குறித்தொதுக்கப்பட்ட அதிகாரங்களை முழுமையாகப் பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும். அவ்வாறு பெற்றால் அதன் மூலம் தமிழ் மக்களின் பெரும்பாலான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும். அதை விடுத்து மூன்றில் இரண்டு பெரும்பான்மையுள்ள ஒரு அரசாங்கத்துடன் கடந்த காலங்களைப் போல வீம்புக்கு மல்லுக்கட்ட முயன்றால் இருப்பதையும் இழக்கும் நிலைகூட ஏற்படலாம்.

**தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க...**

# கல்வி அமைச்சின் புதிய செயலாளர் யார் தெரியுமா?

**த**னது மகனுடன் சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றிய உபவேந்தர்!

மத்தேகொடை வித்தியாதீப மத்திய மகாவித்தியாலய கல்விப்பொது சாதாரண தரப் பரீட்சை நிலையத்திற்கு முன்னால் கடந்த 12ம் திகதி ஒரு மோட்டார் வண்டி வந்து நின்றது. அந்நாளில் நடைபெற்றது க.பொ.த. சா.த. தமிழ்மொழி பரீட்சையாகும். மோட்டார் வண்டியிலிருந்து இறங்கி வந்தது தந்தை-மகன் இருவருமாகும். அவர்கள் இருவரில் ஒருவர் நுழைவாயில் பாதுகாப்பு அதிகாரியினால் நிறுத்தப்படுகின்றார்.

இது ஒரு பரீட்சை நிலையமாகும். உங்களுக்கு உள்ளே செல்வதற்கு அனுமதியில்லை. பரீட்சைக்கு தோற்றும் மகனை மாத்திரம் உள்ளே அனுமதிக்கலாம் எனக் கூறினார். அவர் அப்படிக் கூறியது பிள்ளைகள் அல்லாது பெற்றோர்கள் பரீட்சைக்குத் தோற்றுவது பற்றி அவர் அறிந்திருக்கவில்லை என்பதனாலாயிருக்க வேண்டும்.

ஆனால் தானும் அந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதாக அத் தந்தை தனது கையில் வைத்திருந்த அனுமதிப் பத்திரத்தைக் காட்டியவாறு கூறினார். அதைப் பார்த்த பாதுகாப்பு அதிகாரி அவரை உள்ளே செல்ல அனுமதித்தார். உள்ளே சென்று பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த அவர் யார் எவர் என்று மேற்பார்வையாளர்கள் அறிந்திருக்கவில்லை. தந்தை தமிழ் மொழிப் பரீட்சைக்குத் தோற்றிய அதே பரீட்சை மண்டபத்தில் தனது மகனும் பரீட்சைக்குத் தோற்றினார்.

இவ்வாறு பரீட்சைக்கு தோற்றியவர் வேறு யாருமின்றி மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் கபில பெரேரா (Professor K.Kapila C.K. Perera) ஆவார்.

நான் கல்விப்பொது சாதாரண தர தமிழ் பரீட்சைக்குத் தோற்றியது எனது தொழிலில் பதவி உயர்வு பெறும் நோக்கத்திலோ சம்பள உயர்வு பெறும் நோக்கத்திலோ இல்லை. நான் நம்பும் ஒரு விடயம்தான் இனங்களுக்கிடையில் ஒற்றுமை ஏற்பட வேண்டுமாயின் ஒருவருக்கொருவர் தமது கருத்துக்களை பரிமாறிக்கொள்வது அவசியமாகும். அவ்வாறு கருத்துக்களை



Vice-Chancellor K.Kapila C.K. Perera
Professor of Mechanical Engineering,
University of Moratuwa

பரிமாறிக்கொள்வதற்கு அந்த இனத்தவர்களுடைய மொழியைக் கற்றிருப்பது அவசியமாகும். அதனூடாக அவர்களது இலக்கியம், கலாச்சாரம் போன்றவற்றைப் பற்றி அறிந்துகொள்ள முடியும். நான் பரீட்சைக்கு தோற்றுவது இந்த நோக்கத்திலாகும். தமிழ்மொழியைக் கற்கும் முதல் கட்டமாகும்.

தான் கல்விப்பொது சாதாரண தரத் தமிழ் மொழிக்கு தோற்றிய நோக்கத்தை மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் கபில பெரேரா இவ்வாறு கூறினார்.

பேராசிரியர் கபில பெரேரா தனது ஆரம்ப கல்வியைக் கற்றது வேவிட்டை மைத்திரீ வித்தியாலயத்திலாகும். சிறுவயதிலேயே தந்தையை இழந்துவிடுகின்றார். ஆறாம் தரத்தில் பாணந்துறை ஸ்ரீ சுமங்கல வித்தியாலயத்திற்குப் பிரவேசிக்கும் இவர் உயர் தரத்தில் சித்தியடைவது 1980ம் ஆண்டில் பாடசாலையின் கணிதப் பிரிவில் மிகச்சிறந்த பெறுபேறைப் பெற்றவராக ஆவார். சா.த. பரீட்சையின் பின் அவரை கொழும்பிலுள்ள பாடசாலை ஒன்றிற்கு அனுமதிப்பதற்கு முயற்சித்தார் அவரது தாயார். அந்தக் காலத்தில் சா. தரம் என்று ஒன்று இருக்கவில்லை. அந்த பரீட்சையை அழைத்தது NCGE எனவாகும். அந்தப் பரீட்சையில் தமிழ் மொழி இருக்கவில்லை.

நான் சாதாரண தரத்தில் சித்தியடைந்ததும் எனது தாயார் என்னை கொழும்பு ஆனந்தா கல்லூரியில் சேர்ப்பதற்கு அழைத்துச் சென்றார். அங்கு அதிபர் எனது சா.த. பெறுபேறுகளின் அடிப்படையில் என்னை வணிகப் பிரிவிலேயே இணைத்துக் கொள்ள முடியும் என்றார். நான் வணிகப் பிரிவில் கல்வியை மேற்கொள்ள விரும்பவில்லை. எனது தாய் என்னை கொழும்பு ரோயல் கல்லூரிக்கு அழைத்துச் சென்றார். அங்கு என்னை இணைத்துக் கொண்டனர். ஆனாலும் நான் ரோயல் கல்லூக்குச் சென்றது ஒரு நாள் மாத்திரமே. நான் அந்த நாள் வீடு திரும்பும் போது பிற்பகல் 4.30 ஆகியது. நான் தாயிடம் ரோயலுக்கு செல்ல முடியாதென்று கூறினேன். மறுநாள் திரும்பவும் நான் சுமங்கலவிற்கே சென்றேன்.

"1981ம் ஆண்டில் நான் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றேன். அது மொறட்டுவை பல்கலைக்கழகத்திற்காகும். அதேநேரத்தில் நான் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்கு விண்ணபித்திருந்தேன். அதிலும் எனக்கு அனுமதி கிடைத்தது. பல்கலைக்கழகம் செல்வதா இல்லை பாதுகாப்பு கல்லூரிக்கு செல்வதா என்று தெரிவு செய்ய நேர்ந்தது. என்னுடைய அதிர்ஷ்டத்திற்கு கொத்தலாவலையில் பயிற்சி பெற்றுக்கொண்டே மொறட்டுவையில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு அனுமதி கிடைத்தது. அதனால் இரண்டையும் ஒரே நேரத்தில் மேற்கொண்டேன். நான் 85ம் ஆண்டில் கொத்தலாவலையில் அதிகாரியானேன். 86ம் ஆண்டில் முதலாம் வகுப்பு பட்டமொன்றுடன் அவ்வாண்டின் இரண்டாவது மாணவனாக மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் எனது பட்டப்படிப்பை முடித்தேன். அவ்வாறு இருக்கும்போது நான் நேராக கடற்படையில் இணைந்தேன். அபீத, டோரா, விக்கிரம போன்ற கப்பல்களில் சேவையாற்றினேன். கடற்படையின் பொறியியல் பிரிவில் சேவையாற்றினேன். அந்தக் காலத்தில் அமெரிக்காவில் எனது மேற்படிப்பை முடிப்பதற்கு எனக்கு முழு புலமைப் பரிசில் கிடைத்தது. நான் PHD வரை கல்வி கற்று 93ம் ஆண்டில் மீண்டும் இலங்கைக்கு வந்து கடற்படையிலேயே இணைந்தேன். 95ம் ஆண்டில் லெப்டினன்ட் கமாண்டராக இருக்கும் போது கடற்படையிலிருந்து விலகி மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் இயந்திரப் பொறியியல் பிரிவில் விரிவுரையாளராக இணைந்தேன். அது தொடக்கம் நான் சேவையாற்றியது மொறட்டுவை பல்கலைக்கழகத்திலாகும். நான்

கடற்படையில் சேவையாற்றியது யுத்தம் நடைபெறும் காலத்திலாகும். அந்தக்காலத்தில் தமிழ் மொழியைக் கற்க வேண்டுமென்ற ஆவல் எனக்கு இருந்தது. ஆனால் எனக்கு இருந்த வேலையுடன் அதற்கு நேரத்தை ஒதுக்க முடியவில்லை." என பேராசிரியர் கபில பெரேரா கூறினார். அவர் முதன்முதலாக தமிழ் பரீட்சைக்கு தோற்றுவதற்கு முயற்சி செய்தது 2014ம் ஆண்டிலாகும்.

நான் எனது மகளை வகுப்புகளுக்கு அழைத்துச் செல்லும்போது பிலியந்தல பன்சலையில SB அழுத்கெதர என்ற ஆசிரியர் நடத்தும் தமிழ் வகுப்புக்கான விளம்பரம் ஒன்றைக் கண்டேன். அதற்கும் சில நாட்கள் சென்றேன். சரியாக மார்ச் 14ம் திகதி மின்வலு அமைச்சின் செயலாளர் என்னை தொடர்பு கொண்டு மின்சார சபையின் உப தலைவராக பொறுப்பேற்குமாறு கூறினார். அப்பதவியை பொறுப்பேற்று மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பிரிவின் தலைவராகவும் கடமையாற்றுவதுடன் சிரமமாக இருந்ததால் அந்த ஆண்டின் பரீட்சைக்கு தோற்றும் சிந்தனையை விட்டுவிட்டேன். ஆனாலும் எனது இலக்கை கைவிடவில்லை. இந்த ஆண்டில் ஜீலை மாதம் தமிழ் பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பித்தேன். அவ்வாறு செய்துவிட்டு தனியாக தமிழ்மொழியைக் கற்கும் முயற்சியில் இறங்கினேன்.

ஆனாலும் நான் சிந்தித்தேன். இப்பரீட்சையில் சித்தியடையவில்லை என்றால் அவமானமாக இருக்கும். ஏனென்றால் மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் சா.த. தமிழ் மொழியில் சித்தியடையவில்லை என்று செய்தி வரும் என்பதனாலாகும். அதனால் பரீட்சைக்கு சம்பந்தமான அனைத்து பாடப் புத்தகங்களையும் சேகரித்தேன். அரசினால் வழங்கப்படும் பேச்சுத் தமிழ், எழுத்துத் தமிழ், முதலாம் இரண்டாம் மூன்றாம் தரங்களின் பாடப் புத்தகங்களையும், எனது மகள் மகன்களுடைய பாடப்புத்தகங்களையும் app ஒன்றையும் அகராதியையும் கையில் வைத்துக் கொண்டு பரீட்சைக்கு தயாரானேன். ஈஸ்டர் ஞாயிறு தினம் வரையில் பிலியந்தலையில் தமிழ் வகுப்பொன்றிற்குச் சென்றேன். ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் போதும் நான் அவ்வகுப்பில் தான் இருந்தேன். அவ்வகுப்பு இரவில் தான் நடைபெற்றது. தாக்குதலின் பின் வகுப்பை இரவில் நடத்தாமல் பகலில் நடத்தினார்கள். அதனால் அந்த வகுப்பிற்கும் என்னால் செல்ல முடியவில்லை.

இவ்வாறு தனியாக தமிழ் மொழியைக் கற்றுக் கொண்டிருந்த பேராசிரியர் கபில பெரேராவின் இளைய மகனாரும் அதே பரீட்சைக்கு தயாராகிக் கொண்டிருந்தார். அந்தக் காலத்தில் அவரது அனுபவத்தை பின்வருமாறு விளக்கினார்.

நான் ஒவ்வொரு நாளும் காலையில் உடற்பயிற்சிக்காக நடந்து செல்லும் போது எனது கையடக்க தொலைபேசியில் ஒற்றைச் சொற்கள், எதிர்ச்சொற்கள் என்பவற்றை படம் பிடித்து அதனை படித்துக்கொண்டு தான் நடப்பேன். பரீட்சைக்கு ஒரு வாரத்திற்கு முன்பு தான் இரண்டாவது பகுதிக்கு படிக்க ஆரம்பித்தேன். நான் சரியாக பரீட்சைக்கு படித்தது பரீட்சைக்கு முன் வந்த போயா தினத்திலாகும். அன்று அனைத்து வேலையையும் நிறுத்திவிட்டு பரீட்சைக்காக படித்தேன். அன்று இரவு ஒரு சம்பவம் நடைபெற்றது. எனது அனுமதிப் பத்திரத்தை கையொப்பமிட்டு இருக்கவில்லை. நான் செவ்வாய்க்கிழமை பின்னேரம் கம்பஸ் ரெஜிஸ்ட்ராரிடம் கூறி ஒப்பமிட்டுக் கொள்வதாக நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் அந்நாள் காலையிலிருந்து பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் ஒரு விழாவில் கலந்து கொண்டிருந்தேன். நான் அந்த விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டதனால் அன்று அதனை செய்துகொள்ள முடியவில்லை. நான் திரும்பவும் பல்கலைக்கழகத்திற்கு செல்லும் போது இரவு 8 மணி ஆகியது. வீட்டிற்கு செல்லும் போது இரவு 9 மணி. மறுநாள் போயா என்பதால் விடுமுறை. கிராம சேவகரிடம் செய்துகொள்வதாக நினைத்துக்கொண்டு மகளிடம் அம்மாவிடம் கூறி அதனை ஒப்பமிட்டுக் கொள்ளுமாறு கூறினேன். எனது மனைவி இரத்தினபுரி அடிப்படை மருத்துவமனையில் சிறுவர் நோய் சம்பந்தமான விசேட வைத்தியராக கடமை புரிகின்றார்.

நான் அவ்வாறு கூறியதும் என்னுடைய மனைவி நான் விளையாட்டாக சொல்கின்றேன் என்று நினைத்தார்கள். நான் விண்ணப்பித்திருப்பதாக அவருக்கு தெரிந்திருந்தாலும் நான் உண்மையிலேயே பரீட்சைக்கு தோற்றுவேன் என்று அவர் நினைத்திருக்கவில்லை. அதனால் விளையாட்டாக பல விடயங்களை கூறினார்கள். நான் கூறினேன் இன்று என்னை தொந்தரவு செய்யாதீர்கள் நான் பரீட்சைக்காக தயாராகின்றேன் என்று. எனது மகனும் இதே பரீட்சைக்கு தயாராகின்றார். அவரும் படித்துக்கொண்டு இருந்தார். அவரிடம் சென்று "மகனே, நீங்களாவது பரவாயில்லை. அங்கே இருக்கும் சிறுவர், அவர் மிகவும் தீவிரமாக படிக்கின்றார்" என்று கூறி வேடிக்கையாக சிரித்தார்.

செவ்வாய்க்கிழமை பின்னேரம் தான் பரீட்சைக்காக விடுமுறை கோரி விண்ணப்பித்தேன். சாரதியிடம் வியாழக்கிழமை வரமாட்டேன், ஒரு சிறிய வேலையாக செல்கின்றேன் என்று கூறினேன். ஆனால் எனது செயலாளரிடம் பரீட்சைக்கு தோற்றுவதாக கூறினேன். எனது காரியாலயத்தில் நேரம் கிடைக்கும் போதெல்லாம் படித்துக் கொண்டிருப்பேன். நான் சா.த. பரீட்சைக்கு தோற்றுகின்றேன் என்று அவர் விளையாட்டாக சிரிப்பார்.

பரீட்சை அன்று தனது மகனுடன் பரீட்சைக்கு சென்ற பேராசிரியர் கபில பெரேராவுக்கு இன்னும் பல அதிசயமான நிகழ்வுகள் காத்திருந்தன.

"பரீட்சை மண்டபத்தில் எனக்குப் பின்னால் தான் என்னுடைய மகன் அமர்ந்திருந்தார். நாங்கள் இருவரும் ஒன்றாகத் தான் பரீட்சைக்கு தோற்றினோம். அது ஒரு விநோதமான அனுபவமாக இருந்தது. தந்தையும் மகனும் சா.தரத்தில் ஒரே பரீட்சைக்கு தோற்றும் முதல் முறையா என்று எனக்குத் தெரியாது. இன்னும் வயதானவர்கள் பரீட்சை மண்டபத்தில் இருந்தார்கள். ஊக்கமாக இருந்தவர்கள் யார் என்று பார்ப்பதற்கு கூட நேரமிருக்கவில்லை. பரீட்சை மண்டபத்தை தேடுவதற்கு அதிக நேரம் செலவானதால் சரியான நேரத்தில் தான் பரீட்சை மண்டபத்தை சென்றடைந்தேன். ஆகக் குறைந்தது என்னுடைய தண்ணீர் போத்தலினால் குடிப்பதற்கு கூட நேரம் கிடைக்கவில்லை. பல மாணவர்கள் முதலில் பென்சிலால் விடை எழுதினாலும் நான் பேனையினாலேயே எழுதினேன்"

நான் சிறப்பாக பரீட்சைக்கு முகம் கொடுத்தேன் என்று நினைக்கின்றேன். மகனின் 40இல் 38 சரியாக இருந்தது. எனக்கு 40இல் 32 சரியாக இருந்தது. சித்தியடைவேன் என்று எனக்குத் தெரியும். கட்டுரையை அவ்வளவு நன்றாக எழுதவில்லை. அங்கு நடந்தது இதுதான். எனக்கு ஒரு சிறிய தவறு நடந்தது. முதல் பாகத்தில் இரண்டு கேள்விகளுக்கு கட்டாயம் விடை எழுத வேண்டும் என்பதை நான் பார்க்கவில்லை. பந்தியை வாசித்து விடை எழுதுவதை நான் மிகவும் நன்றாக செய்தேன். அதனால் சித்தியடைவேன் என்று நம்புகின்றேன். வேறு நாட்களில் கடைசி ஐந்து கேள்விகள் ஒரு வரைபடத்தை தந்து அதைப்பற்றியதாக இருக்கும். பரீட்சைக்கு முன்பு மகனுடன் இணைந்து முன்னைய ஆண்டுகளின் கேள்விகளுக்கு நன்றாக விடை எழுதுவதற்கு பழகினேன். ஆனால் இம்முறை அந்தக் கேள்வி வரவில்லை. கடைசி மூன்று கேள்விகளும் நான்கு வாக்கியங்களை தந்து அவைகளை சரிப்படுத்தி எழுதுவதாக இருந்தது.

உபவேந்தராக சாதாரண தரத்திற்கு தோற்றுகிறேன் என்று எனக்குத் தோன்றவில்லை. சாதாரண மாணவன் ஒருவன் பரீட்சைக்கு தோற்றுவது போலவே எனக்குத் தோன்றியது. நான் உயர் தரப் பரீட்சையில் கணித பாடத்திற்கு தோற்றியது நினைவுக்கு வந்தது. இந்த பரீட்சையில் சித்தியடைவதை விட முக்கியமானது நான் பெற்ற அறிவாகும். எனக்கு முழு வினாத்தாளையும் படித்து விளங்கிக் கொள்ள முடியுமாக இருந்தது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. நான் எப்போதும் எனது கல்வியை விருப்பத்துடனும் உற்சாகத்துடனுமே மேற்கொண்டேன். இன்னும் அவ்வாறே தான்.

வடக்கில் சென்று சேவையாற்றுவதற்கு எனக்கு மிகவும் விருப்பமாக உள்ளது. பேராசிரியர் கந்தசாமி ஐயா அவர்கள் யாழ்ப்பாணத்தில் உபவேந்தராக கடமையாற்றுகின்றார். நான் இன்னும் ஒரு வருடமே உப வேந்தராக இருப்பதாக அவரிடம் கூறினேன். இன்னும் சில காலம் உபவேந்தராக இருக்க முடியுமே என அவர் கூறினார். ஆனால் பொறுப்பேற்ற காலத்திற்கு மேலதிகமாக ஒரு நாள் கூட பதவியில் இருக்க மாட்டேன் எனக் கூறினேன். நான் கடமை புரிந்த அனைத்து இடங்களிலும் அப்படித்தான். நான் பேராசிரியர் கந்தசாமி ஐயா அவர்களிடம் அடுத்த வருடம் நவம்பர் மாதம் யாழ்ப்பாணத்திற்கு வருவதாகக் கூறினேன். எனக்கு சிங்களம் மற்றும் ஆங்கிலத்தில் பேசாத ஒரு இடத்தில் தங்கியிருந்து தமிழ் கற்க வேண்டும் எனக் கூறினேன். எனக்கு அப்படியும் ஒரு இலக்கு இருக்கின்றது. அதனால் தான் நான் சா. தரத்திற்கு தோற்றினேன். பரீட்சை முடிந்ததற்காக நான் தமிழ் கற்பதை நிறுத்த மாட்டேன். என்னிடம் பேச்சுத் தமிழ் புத்தகங்கள் உள்ளன. அவற்றை வைத்து நான் எப்படியாவது தமிழ் பேசுவதற்கு கற்றுக் கொள்வேன்.

98ம் ஆண்டில் நான் சசகாவாவில் ஜப்பான் மொழியைக் கற்றுக் கொண்டேன். என்னால் ஜப்பான் மொழியில் பேச முடியும். அதேபோல் தமிழ் பேச வேண்டும் என்று மிகுந்த ஆவலுடன் இருக்கின்றேன். சுனாமி காலத்தில் நான் நாராவின் தலைவராக இருந்தேன். அந்தக் காலத்தில் மீன் வள அமைச்சராக இருந்தவர் சந்திரசேன விஜேசிங்க. சுனாமியின் பின் ஒருநாள் ஜப்பான் தூதுவர் காலி துறைமுகத்தில் படகுகளை விநியோகிக்கும் விழாவில் கலந்துகொண்டார். அவரது உரையை சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மொழிமாற்றம் செய்தது நானே. அதனால் கற்றுக்கொண்ட எதுவும் வீன் போகாது என்று உணர்ந்தேன்.

நான் பரீட்சைக்கு தோற்றியது பத்திரிகையில் வருவதை நான் விரும்பவில்லை. என்னுடைய மாணவன் ரன்ஜித் அமரசிங்க மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக கடமை புரிகின்றார். அவர் என்னை தனிப்பட்ட விடயமாக சந்திப்பதற்கு வந்திருந்தார். நேற்று முழுவதும் நான் உங்களை தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயற்சி செய்தேன், ஆனால் முடியவில்லை. சேர் பரீட்சைக்கு தோற்றியதாக கூறுவது உண்மை தானா எனக் கேட்டார். நான் ஆம் என்றேன். அவர் தான் இதனை பத்திரிகையில் போட வேண்டுமென கூறினார். பேராசிரியர் ஜயந்த விஜேசேகரவும் என்னைப் பார்க்க எனது அலுவலகத்திற்கு வந்தார். கல்வி கற்கும் மாணவர்களுக்கு முன்மாதிரியாக அமையும் என்று அவர்கள் கூறியதனாலேயே நான் உங்களுடன் உரையாட சம்மதித்தேன்.

நான் வாழ்க்கையில் பெற்ற அனைத்து வெற்றிக்கு பின்னாலும் இருந்தது நான் கற்ற கல்வியாகும். எனது தந்தை நான் சிறுவயதில் இருக்கும் போதே இறந்துவிட்டார். ஆனால் எனது கல்வியை மிகவும் ஆர்வமாக மேற்கொள்கின்றேன். நாம் பணம் சம்பாதிக்கும் நோக்கில் கல்வி கற்கக்கூடாது. இன்னொருவருக்கு தொந்தரவு செய்யாமல் வாழ்வதற்கு கல்வி அத்தியவசியமாகும். அதனால் இன்று இருக்கும் பரீட்சையில் சித்தியடையும் கல்வித்திட்டம் சிறந்ததல்ல. தான் கற்பதை விருப்பத்துடன் கற்க வேண்டுமென்று அவர் கூறுகின்றார்.

இங்கே குறிப்பிடப்படும் பேராசிரியர் கபில பெரேரா அவர்கள் தான்13.08.2020 முதல் கல்வி அமைச்சின் செயலாளர்!

மூலப்பிரதி: Lakmal Bogahawaththa
தமிழ்ப்பெயர்ப்பு: Arshak Akram
இப்பதிவு 2019 ஆம் ஆண்டு டிசம்பரில் எழுதப்பட்டது.

---

**3ம் பக்கத்தொடர்ச்சி...**

அரசாங்கத்துக்கும் இந்த விடயத்தில் பாரிய பொறுப்புண்டு. அது மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை இனிமேலும் சாக்குப் போக்குச் சொல்லி இழுத்தடிக்காமல் அவற்றை முழுமையாக வழங்க முன்வர வேண்டும். நிறைவேற்று அதிகாரமும் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் உள்ள ஒரு அரசாங்கம் தனது நாட்டின் ஒன்பது மாகாணங்களுக்கும் சில அதிகாரங்களைப் பங்கிட்டுக் கொடுத்து நாட்டில் நிலையான சமாதானத்தையும் வளர்ச்சியையும் ஏற்படுத்துவதால் எந்தப் பாரிய பிரச்சினையும் வரப் போவதில்லை.

புதிய அரசாங்கத்துக்கு முன்னால் உள்ள இரண்டு பிரதான பிரச்சினைகள் பொருளாதார அபிவிருத்தியும் இனப் பிரச்சினைத் தீர்வுமாகும். இதைப் புரிந்து கொண்டு செயல்படுவதில்தான் தற்போதைய அரசாங்கத்தின் எதிர்காலம் தங்கியுள்ளது. தமிழர் தரப்புக்கும் இது பொருந்தும்.

நன்றி இணையத்தளம்: chakkaram.com

---

என் இதயம் துடிப்பதை நிறுத்திவிடவில்லை என் கைகள் எழுதுவதை நிறுத்தப்போவதில்லை விடியலை நோக்கிப் பயணிக்கும் என்னை உங்களால் தடுக்கவியலாது! — கவிஞர் வரவர ராவ்

# இலங்கை பொதுத்தேர்தல் முடிவுகளில் அவதானிப்புக்குரிய சில விடயங்கள்

இலங்கையின் 9ஆவது பாராளுமன்றத்துக்கான பொதுத்தேர்தல் இம்மாதம் ஆகஸ்ட் 05ஆம் திகதி நடந்து முடிந்திருக்கிறது. கொரோனா வைரஸ் நோய் காரணமாக தேர்தலே நடைபெறாமல் போய்விடுமோ என்ற அச்சம் நிலவிய சூழலில் வெற்றிகரமாக தேர்தலை இலங்கை அரசு நடத்தியதன் மூலம் ஜனநாயக பாரம்பரியம் பாதுகாக்கப்பட்டிருக்கிறது எனலாம்.

இந்தத் தேர்தலின் முடிவுகள் பல ஆச்சரியங்களை ஏற்படுத்தியிருக்கின்றது. ஆனால் அரசியல் அனுபவசாலிகள் இந்தத் தேர்தல் முடிவுகள் இப்படித்தான் இருக்கும் என்பதை முன்கூட்டியே கணித்துக் கூறிவிட்டனர். எனவே அவர்களுக்கு இந்தத் தேர்தல் முடிவுகள் ஆச்சரியமானவை அல்ல.

ஆளும் பொதுஜன பெரமுன எல்லோரும் எதிர்பார்த்ததை விட அதிகமான – 145 உறுப்பினர்களைப் பெற்றுள்ளதுடன், நேசக் கட்சிகளின் உதவியுடன் மூன்றில் இரண்டு பெரும்பான்மையையும் பெற்றுள்ளது. எனவே அது இனி தான் விரும்பிய எதனையும் செய்ய முடியும்.

அதேநேரத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்தத் தேர்தலில் பாரிய தோல்வியைத் தழுவும் என்றும், அது பெறும் உறுப்பினர் தொகை பத்துக்குள்தான் இருக்கும் எனவும், 1970 தேர்தலின் போது தமிழரசு – தமிழ் காங்கிரஸ் கட்சிகளின் பிரபலமான பல தலைவர்கள் மண் கவ்வியது போல இந்தத் தேர்தலிலும் பலர் மண் கவ்வுவார்கள் என்றும் சில அரசியல் அவதானிகள் கணித்துக் கூறியது அப்படியே நடந்திருக்கிறது.

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா உட்பட பல தமிழரசு கட்சி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் தோல்வியைத் தழுவி இருக்கின்றனர். தமிழ் தேசியக் கூட்டமைப்பு தலைவர் இரா.சம்பந்தன் தனது திரிகோணமலை தொகுதியில் வெற்றி பெற்றிருந்தாலும் வெறுமனே 138 வாக்குகள் வித்தியாசத்திலேயே தப்பிப் பிழைத்திருக்கிறார்.

அதேநேரத்தில் இலங்கையின் பழமை வாய்ந்த கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி வரலாற்றில் முதல் தடவையாக




எந்தவொரு உறுப்பினரையும் இந்தத் தேர்தலில் பெறவில்லை. ஐ.தே.கவை மக்கள் நிராகரிப்பார்கள் என்பது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாக இருந்தபோதிலும் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் வரட்டுப் பிடிவாதமே ஒரு உறுப்பினரைக் கூட அக்கட்சி பெறாமைக்கு காரணம்.

**புனிதன்**

மறுபக்கத்தில் ஐ.தே.கவிலிருந்து பிரிந்து சென்று தனியாகப் போட்டியிட்ட சஜித் பிரேமதாச குழுவினர் ஐம்பதுக்கும் அதிகமான உறுப்பினர்களை வெற்றிபெற வைத்து உண்மையான ஐ.தே.க. தாமே என்பதை நிரூபித்துள்ளனர். தமது கட்சிக்கு பாரிய தோல்வி ஏற்பட்ட பின்னர் கூட ரணில் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து விலகுவதற்கு விருப்பமின்றி பிடிவாதமாக இருக்கின்றார். கட்சி அழிந்தாலும் பரவாயில்லை, அது எப்பொழுதும் தமது குடும்பச் சொத்தாக இருக்க வேண்டும் என்பதே ரணிலின் நிலைப்பாடு.

இந்த தேர்தல் முடிவில் குறிப்பிடத்தக்க ஒரு அம்சம் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வாக்கு வங்கி சரிவடைந்திருந்தாலும், அந்தச் சரிவை முற்போக்கானதாகக் கொள்ள முடியாது இருப்பதாகும். ஏனெனில் கூட்டமைப்பின் வாக்குகளை கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தினதும், சி.வி.விக்னேஸ்வரனதும் கட்சிகள் பிரித்தெடுத்து சில உறுப்பினர்களைப் பெற்றிருக்கிறார்கள். அவர்களது தெரிவு ஒரு நல்ல விடயமல்ல. ஏனெனில் அவர்கள் இருவரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பை விட மோசமான பிற்போக்கு தமிழ் தேசிய வெறியர்கள்.

இருந்தாலும் வட மாகாணத்தைப் பொறுத்தவரை இரண்டொரு நல்ல விடயங்களையும் தமிழ் வாக்காளர்கள் செய்திருக்கிறார்கள். அதில் ஒன்று, வழமைபோல ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவை இம்முறையும் மக்கள் வெற்றிபெற வைத்திருப்பதுடன், அவரது கட்சிக்கு வன்னி மாவட்டத்திலும் ஒரு உறுப்பினரைத் தெரிவு செய்து வழங்கி இருக்கிறார்கள்.

வடக்கு மக்களின் ஆச்சரியகரமான இன்னொரு பங்களிப்பு என்னவென்றால், வரலாற்றில் முதல் தடவையாக சிறீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிட்ட அங்கஜன் இராமநாதனை யாழ் மாவட்டத்தில் வெற்றிபெற வைத்தமையாகும். அதுமட்டுமல்ல, முழு இலங்கையிலும் சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ஒரேயொருவர் அங்கஜனே.

மறுபக்கத்தில், இன்னொரு ஆச்சரியகரமான நிகழ்வு கிழக்கு மாகாணம் மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகள் இயக்க முன்னாள் முக்கியஸ்தர் பிள்ளையான் என அழைக்கப்படும்

**தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...**

# இலங்கையில் தலைமறைவாக வாழ்ந்த ப.ஜீவானந்தம்!

“ஜீவா” என அழைக்கப்படும் தோழர் ப.ஜீவானந்தம் (பெற்றோர் வைத்த இயற்பெயர் சொறிமுத்து. சொறிமுத்து என்பது அவர்களது குல தெய்வத்தின் பெயராகும்) இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மகத்தான தமிழக தலைவர்களில் ஒருவர். 1907 ஆகஸ்ட் 07ஆம் திகதி பிறந்த அவர் 1963 ஜனவரி 18ஆம் திகதி காலமானார். 55 வயது மட்டுமே வாழந்த அவர், தனது தன்னலமற்ற பணிகள் மூலமும், எளிமையான வாழ்க்கை மூலமும் தமிழக மக்களின் இதயங்களில் நிரந்தர இடத்தைப் பிடித்தவர். அதன் காரணமாகவே வேறு எந்த இடதுசாரித் தலைவருக்கும் கொடுக்காத கௌரவமாக எம்.ஜீ.ஆர். முதலமைச்சராக இருந்தபோது ஜீவாவின் பெயரால் ‘ஜீவா மாவட்டம்’ என்றொரு மாவட்டத்தையே உருவாக்கிப் பெருமைப்படுத்தினார்.

ஜீவா தனது பொதுப்பணியை முதலில் சீர்திருத்தவாதியாக ஆரம்பித்து பின்னர் காந்தியவாதியாகச் செயல்பட்டு இறுதியாக கம்யூனிஸ்ட்டாக வாழ்ந்து மறைந்தார். இது ஒரு உண்மையான மனித வாழ்க்கையின் பரிணாம வளர்ச்சியாகும்.

ஜீவா வெறுமனே ஓர் அரசியல்வாதி மட்டுமல்ல. அவர் மிகச் சிறந்த இலக்கியவாதியும் கூட. அதுமட்டுமின்றி சிம்மக்குரலில் கர்ச்சித்துப் பேசும் ஒரு பெரும் மேடைப் பேச்சாளரும் கூட. அவர் பேசுகிறார் என்றால் அவரது ஆற்றொழுக்கான தமிழைக் கேட்க எதிரணியைச் சேர்ந்தவர்களும் ஆயிரக்கணக்கில் கூடிவிடுவார்கள்.

ஜீவா வெறுமனே புதுமையான முற்போக்கு இலக்கியவாதி மட்டுமல்ல. பழந்தமிழ் இலக்கியத்தையும் கரைத்துக் குடித்தவர். தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் ஸ்தாபகர். ‘தாமரை’ முற்போக்கு இலக்கிய இதழின் ஆரம்பகர்த்தா. கம்யூனிஸ்ட் கட்சியின் பத்திரிகையான ‘ஜனசக்தி’யின் பிதாமகன். இப்படி ஜீவாவைப் பற்றி எழுதுவதானால் ஆயிரக்கணக்கான நூல்களை எழுதி விட முடியும்.

இவ்வாண்டு ஆகஸ்ட் 21ஆம் திகதி அவரது 113ஆவது பிறந்த தினமாகும். அந்தத் தினத்தை நினைவுகூருமுகமாக இலங்கை முற்போக்கு இலக்கியத்தின் முன்னோடிகளில் ஒருவரான தோழர் கே.கணேஸ் அவர்கள் கம்யூனிஸ்ட் மு.கார்த்திகேசன் நினைவு மலரில் ஜீவா இலங்கையில் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்த சம்பவம் பற்றி எழுதிய பகுதியை எமது வாசகர்களுக்காக கீழே மறுபிரசுரம் செய்துள்ளோம்.



-வானவில்

1950இல் கல்கத்தாவில் நடந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மகாநாட்டுக் கூட்டத்தில் ஒரு முக்கிய தீர்மானம் நிறைவேறியது. அதன்படி பி.சி.ஜோசி செயலாளராக இருந்தவர், அவரது கொள்கைகள் மிதவாதப் போக்குடையவை என வாதாடிய பி.டி.ரணதேவைத் தெரிவு செய்ததில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தனது இலட்சியம் நிறைவேற வன்முறையிலேனும் அரசின் அடக்குமுறையை எதிர்த்துப் போராடி பாட்டாளி வர்க்க அரசை அமைக்கத் தீர்மானித்தது. அக்காங்கிரசிற்கு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதியாகச் சென்றிருந்தவர் மாத்தறை டாக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்க. அம்மாநாட்டிற்கு தமிழ் நாட்டுக் கட்சியின் பிரதிநிதியாக நாவலர் ப.ஜீவானந்தமும் பங்குபற்றியிருந்தார். கட்சி எடுத்த திடீர் தீர்மானத்தின் போக்கை உணர்ந்த இந்திய அரசு கட்சியைத் தடைசெய்து முக்கிய உறுப்பினர்களைக் கைது செய்து சிறையிலடைக்கும் சூழ்நிலை உருவாகும் என உணர்ந்த டாக்டர் விக்கிரமசிங்க ஜீவாவைத் தம்முடன் தற்போதைய கொல்கத்தாவினின்று விமான மூலம் கொழும்புக்கு அழைத்து வந்தார்.

அந்நேரம் அரச சட்டங்கள், அடக்குமுறைகள் அமுலாகவில்லை. எனவே ஜீவா கட்சி சார்பாக நடந்த கூட்டங்களில் இலங்கையில் பல ஊர்களில் பேசி அவரது சிம்மக் குரலை கேட்டு மகிழும் வாய்ப்பு மக்களுக்கு கிடைத்தது. இந்திய அரசும் கம்யூனிஸ்ட் கட்சியை அவசர சட்டமியற்றித் தடை செய்ததுடன் அதன் தலைவர்களைக் கைது செய்து சிறையிலும் அடைத்தனர். பலர் Under Ground எனும் தலைமறைவு வாழ்க்கை நடத்தினர். இத்தகைய சூழ்நிலையில் ஜீவா இலங்கையில் சில மாதங்கள் கழிக்க நேர்ந்தது. இடையே இந்தியக் கட்சி இவரது வருகையை வலியுறுத்தி இலங்கை கட்சிக்கு வேண்டுகோள் விடுத்ததின் பேரில் அவரை அக்கரையில் சேர்க்கும் கடமை அமைந்த நிலையில் அக்கரைக்கு அவரை அனுப்பும் ஏற்பாட்டினை பல்கலைக்கழக கல்லூரியில் நூலகராகப் பணிபுரிந்த பி.கந்தையாவிடம் தரப்பட்டது. தமிழகத்துச் சூழ்நிலை அனுபவமுள்ள என்னை ஒருவனாகக் கருதி உடன் அங்கு சேர்ப்பிக்கும் பணியில் என்னைக் கேட்டுக் கொண்டனர். கந்தையா அவர்கள் யாழ்ப்பாணத்தில் எல்லா ஏற்பாடுகளையும், அங்கு மத்திய கல்லூரியில் பணிபுரிந்த ஆசிரியர் மகாலிங்கத்திடமும், மாஸ்டர் கார்த்திகேசனிடமும் அளித்திருப்பதாகவும் என் பணி அவரை அங்கு அழைத்துச் சென்று துணையிருந்து அக்கரைக்குச் சேர்த்து கையளிக்க வேண்டிக் கேட்டுக் கொண்டபடி முனைந்தேன். யாழ் புகையிரத நிலையத்திலிருந்து கார்த்திகேசனின் அகத்திற்கு கார்த்திகேசனும் மகாலிங்க மாஸ்டரும் எம்மை அழைத்துச் சென்றனர்.

ஜீவா திருநெல்வேலியிலிருந்த கட்சி உறுப்பினரான கொழும்புவாசி ரி.துரைசிங்கம் வீட்டில் தங்க, நான் விக்டோரியா றோட்டிலுள்ள கார்த்திகேசனின் வீட்டில் தங்குவதாக ஏற்பாடு. இத்தகைய பணியின் சூழ்நிலையில் ஓரிரு திங்கள் அன்பர் கார்த்தியுடன் விடுபட்ட முந்தைய மாணவர் கால கலந்துரையாடல்களை உடனிருந்து உரையாடி மகிழும் வாய்ப்பு

அமைந்தது. அவரது இல்லத்தின் முன் அறையை எனக்கு ஒதுக்கி அளித்திருந்தார். அங்கு தங்கி ஆஸ்பத்திரி வீதியிலிருந்த சுபாஸ் கஃபே என்ற உணவகத்தில் உணவருந்தி, மாஸ்டர் மகாலிங்கத்துடன் மத்திய கல்லூரிக்கும் திருநெல்வேலியில் தங்கிய ஜீவாவுடனும் நடமாடும் நிலை அமைந்தது.

ஜீவாவை அக்கரையிற் சேர்க்கும் பணிக்கென நியமிக்கப்பட்ட நாட்கள் தடங்கிவிட்டன. இந்தியாவில் அச்சமயம் சுயராஜ்யம் பெற்று நேரு முதல் அமைச்சராகவும், வல்லபாய் பட்டேல் உள்நாட்டு அமைச்சராகவும் இருந்து, இந்தியாவின் ஒருபகுதி பாகிஸ்தான் எனப் பிரிவுபட்டு, உள்நாட்டுக் கலவரங்கள் தோன்றி பலர் மறைந்த நிலையில் மகாத்மாகாந்தி கொலை செய்யப்பட்ட காலம். தவிரவும் சமஸ்தானங்களான குறுநில மன்னர்கள் இந்திய ஆட்சிக்கு உட்படாது தனித்தியங்கி ஆள முரண்டு பிடித்த நேரம். வல்லபாய் பட்டேலின் வலிய முயற்சியால் திருவதாங்கூர், கொச்சி, போபால், காஸ்மீர், மைசூர் இசைந்து இந்திய அரசுடன் இணைந்து கொள்ள, ஹைதராபாத் நிஜாம் ரஜாக்கார் என்ற குறுநில மன்னன் குண்டர்படையின் துணையுடன் எதிர்த்திருந்து அராஜகம் புரிந்த நிலையில், அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு இந்தியா யுத்த சூழ்நிலையில் அமைந்தது. எனவே இந்தியக் கரையோரப் பகுதிகளில் பலத்த இராணுவப் பாதுகாப்பு நிலை தோன்றியதால், கடலோர எல்லைப் பகுதிகளில் தலைப்படும் படகுகள் அனைத்தும் பரிசீலனைக்கு உள்ளாகும் எனும் நிலையில், இன்று நாளையென பல கிழமைகள் கழிந்தன.

அக்காலத்தே இன்றுபோல் யாழ் நகரில் தொலைபேசி வசதிகள் இன்மையால் மத்திய கல்லூரி மகாலிங்கம் மாஸ்டர் வல்வெட்டித்துறை ஊர்ச்சபைத் தலைவர் திரு. திருப்பதியாரை அறிமுகப்படுத்தி பயண ஏற்பாடுகளை அறிந்து கொள்ளும்படி அறிவித்தபடி வல்வைக்கும் யாழ் நகருக்கும் பன்முறை சென்றபின் தமிழகத்துக் கடற்பகுதி ஹைதராபாத் கலவரம் தீர்ந்ததால் தடையற்றுள்ளதாகவும், குறித்த நாளில் செல்ல வாய்க்கும் எனவும் அறிவிக்கப்பட்டது. ஒருவகையாக யாழ் வந்த ஓரிரு நாளில் முடியுமென எண்ணிய நிகழ்வு நீண்டுவிட்டது. ஜீவா காரைக்கால் அதிராம பட்டினத்தில் அங்கு காத்திருந்தவர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டு, சென்னைக்கு நான் சென்று, அச்சமயம் யாழ் நகருக்கு 30 ரூபாய் (என ஞாபகம்) கட்டணத்தில் காத்தி வீட்டின் அருகே இருந்த 'ஏர் சிலோன்' விமானப் பயணத்தில் திரும்பினேன்.

இத்தகைய பணயச் சுணக்க காலத்தில் வசித்த கால இடைவெளி காத்தியின் பழக்கம், அவரது மேதாவிலாசம், ஆளுமை, எடுத்த செயலை இடையிடீன்றி முடிக்கும் ஆற்றல், நேர்மை, தன்னலம் பேணாத் தகைமை ஆகியவற்றை உணர வாய்த்தது.

(இந்தக் கட்டுரை, தோழர் மு.கார்த்திகேசன் அவர்களின் புதல்வியர்களுள் ஒருவரான ஜானகி பாலகிருஸ்ணன் அவர்களால் கார்த்திகேசனின் 25ஆவது நினைவு ஆண்டையொட்டி வெளியிடப்பட்ட "கம்யூனிஸ்ட் கார்த்திகேசன்" என்ற தொகுப்பு நூலில் தோழர் கே.கணேஸ் அவர்கள் எழுதிய கட்டுரையிலிருந்து எடுத்துப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

தோழர் கணேஸ் கண்டி தலாத்து ஓயாவில் வாழ்ந்து மறைந்தவர். சிறந்த எழுத்தாளர் மற்றும் மொழிபெயர்ப்பாளர். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை உருவாக்கிய முன்னோடிகளில் ஒருவர். இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை உருவாக்குவதிலும் பங்கு வகித்தவர். தோழர் கார்த்திகேசனின் உற்ற தோழர்)

# தோழர் சோமுவின் மறைவுக்கு எமது புரட்சிகர அஞ்சலி!

**கொ**ழும்பில் வாழ்ந்து வந்த "சோமு" என எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் தோழர் சோமசுந்தரம் அண்மையில் காலமாகிவிட்டார் என்பதை மிகுந்த மன வேதனையுடன் அறியத் தருகின்றோம்.

தோழர் சோமு தன்னை இளமைக் காலத்திலேயே கம்யூனிஸ்ட் இயக்கத்துடன் இணைத்துக் கொண்ட ஒருவர். சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தில் சித்தாந்த முரண்பாடு ஏற்பட்டு அதன் எதிரொலியாக இலங்கையிலும் கம்யூனிஸ்ட் இயக்கம் சோவியத் சார்பு – சீன சார்பு என இரு அணிகளாகப் பிளவுபட்ட போது தோழர் சோமு சீன சார்பு அணியுடன் தன்னை இணைத்துக் கொண்டார்.

பின்னர் சீன சார்பு அணியிலும் முரண்பாடு ஏற்பட்டு பெரும்பான்மையினர் அக்கட்சியின் பொதுச்செயலாளர் நா.சண்முகதாசனை நிராகரித்துவிட்டு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) என்ற கட்சியை 1972இல் உருவாக்கிய போது தோழர் சோமு அந்த அணியினருடன் தன்னை இணைத்துக் கொண்டார்.

திருமணமே செய்து கொள்ளாமல் வாழ்ந்து வந்த தோழர் சோமு, ஒரு முழுநேர அரசியல் தொண்டன் போல் செயல்பட்டு வந்தார். எந்தவொரு அரசியல் கூட்டம் நடந்தாலும், புத்தக வெளியீடு நடந்தாலும், அங்கு சோமுவை தவறாமல் காணலாம். கொழும்பு நகரின் பெரும்பாலான பகுதிகளை அவர் கால்நடையாகவே சுற்றியிருப்பார். தோழர்களை அடிக்கடி சந்திப்பதிலும், அவர்களுடன் மனம்விட்டுப் பழகுவதிலும் ஒரு முன்னோடியாக அவர் இருந்தார். அப்படிப் பழகினாலும் கொள்கை என்று வந்தால் தனது நிலைப்பாட்டில் எப்பொழுதும் உறுதியாக நிற்பார்.

புரட்சிகர கம்யூனிஸ்ட் இயக்கமும், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கமும் சிதைவடைந்து செயலற்ற நிலைக்குச் சென்ற நிலையில், அண்மையில் காலஞ்சென்ற மூத்த முற்போக்கு எழுத்தாளர் நீர்வை பொன்னையன் அவர்களை இணைப்பாளராகக் கொண்டு 'இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம்' என்ற அமைப்பு கொழும்பில் உருவாகி செயல்படத் தொடங்கியது. அந்த மன்றம் பெரும்பாலும் மாதம் ஒரு கருத்தரங்கை நடத்தியதுடன், பல நூல்களையும் வெளியிட்டது. அந்த மன்றத்துடன் தன்னை இணைத்துக் கொண்ட தோழர் சோமு, இறுதி வரை அதன் செயல்பாடுகளுடன் மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்பட்டு வந்தார்.

தோழர் சோமுவின் திடீர் மறைவு அவருடன் பழகிய, அவரை நேசித்த அனைவருக்கும் ஆறாத வருத்தம் அளிக்கும் பேரிழப்பாகும். அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது சகோதரர்களின் குடும்பங்களுக்கும், தோழர்கள் நண்பர்களுக்கும் 'வானவில்' சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன், தோழர் சோமுவுக்கு எமது புரட்சிகர அஞ்சலியையும் செலுத்துகின்றோம்.

**–வானவில் வெளியீட்டுக்குழு சார்பாக**

# தீமைகள் நன்மைகளாக மாறலாம்!



பிரதமர் மகிந்த ராஜபக்ச தலைமையில் அமைந்துள்ள புதிய அரசாங்க அமைச்சரவையில் வழமையாக இடம் பெறும் மூன்று இடதுசாரிக் கட்சிகளில் ஒரு கட்சிக்கு மட்டுமே இம்முறை இடம் வழங்கப்பட்டுள்ளது. அந்த ஒரு கட்சி ஜனநாயக இடதுசாரி முன்னணியாகும். அதன் தலைவர் வாசுதேவ நாணயக்காரவுக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பொறுப்பொன்று வழங்கப்பட்டுள்ளது.

மற்றைய இரு இடதுசாரிக் கட்சிகளான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிக்கோ, லங்கா சமசமாஜக் கட்சிக்கோ அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவில்லை. வழமையாக சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் அமையும் அரசாங்கங்களில் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் அதன் பொதுச்செயலாளர் டியு குணசேகரவுக்கும், சமசமாஜக் கட்சி சார்பில் அதன் தலைவர் திஸ்ஸ விதாரணவுக்கும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்படுவதுண்டு. இம்முறை அவ்வாறு நடைபெறவில்லை. அதற்கான காரணமும் தெரியவில்லை.

டியு குணசேகர முதுமை காரணமாக நாளாந்த பணிகளைச் செய்ய முடியாத நிலையில் இருப்பதாகக் கூறப்படுகின்றது. திஸ்ஸ விதாரணவைப் பொறுத்தவரையில் பொதுஜன பெரமுன அவருக்கு தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியொன்றை வழங்கியது. அதன் ஊடாக அவருக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படும் என்ற எதிர்பார்ப்பு சமசமாஜக் கட்சிக்கும் ஏனையோருக்கும் இருந்தது. ஆனால் அவ்வாறு நடைபெறவில்லை.

கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரை வழமையாக டியு குணசேகரவுக்கு வழங்கப்படும் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி இம்முறை வழங்கப்படவில்லை. அந்தப் பதவி கம்யூனிஸ்ட் கட்சியின் வேறு புதிய உறுப்பினர் யாருக்காவது வழங்கப்பட்டிருக்கிறதோ தெரியவில்லை.

**பூதவராயன்**

இந்த இடதுசாரிக் கட்சிகள் இரண்டும் வழமைப்பிரகாரம் நடத்தப்படாமல் புதிய அரசாங்கத்தால் 'புறக்கணிப்பு'க்கு உள்ளானதற்கான காரணங்கள் குறித்து பல்வேறு ஊகங்கள் அரசியல் வட்டாரங்களில் அலசப்படுகின்றது. அதில் ஒன்று பொதுஜன பெரமுனவின் எல்லாக் கொள்கைகளையும் இந்த இரு கட்சிகளும் கண்ணை மூடிக்கொண்டு ஏற்கவில்லை என்பதாகும். அதில் ஓரளவு உண்மையும் இருக்கின்றது. சிறீலங்கா சுதந்திரக் கட்சியை விட பொதுஜன பெரமுன கூடுதலான வலதுசாரிப் போக்கும், சிங்களத் தேசியவாதப் போக்கும் கொண்டதென இவ்விரு இடதுசாரிக் கட்சிகளும் கருத்து கொண்டுள்ளதாக இக்கட்சிகளுடன் நெருக்கமான தொடர்புள்ளவர்கள் மூலம் அறிய முடிகிறது.

இது ஒருபுறமிருக்க, இந்த இரு இடதுசாரிக் கட்சிகளுக்கும் அமைச்சு பதவி வழங்கப்படாதது நல்லதே என்ற கருத்துள்ளவர்களும் இருக்கின்றனர். அவர்களது கருத்து என்னவெனில், இடதுசாரிக் கட்சிகள் சுதந்திரக் கட்சி அல்லது பெரமுன கட்சி அரசாங்கங்களில் இணையக்கூடாது என்பதாகும். இடதுசாரிக் கட்சிகள் அந்தக் கட்சிகளுடன் தேர்தல் கூட்டு வைப்பதில் தவறில்லை. ஏனெனில் பொது எதிரியான ஐக்கிய தேசியக் கட்சியைத் தோற்கடிப்பதற்கு அது அவசியமானது. ஆனால் அரசுடன் இணைவது தவறு. அரசாங்கம் எடுக்கும் மக்கள் சார்பு நடவடிக்கைகளை வெளியில் இருந்துகொண்டு ஆதரிக்கலாம். அதேநேரம் அரசு ஏதாவது மக்கள் விரோத நடவடிக்கை எடுத்தால் அதை எதிர்க்க வேண்டும் என்பதே இத்தகையவர்களின் கருத்து.

அத்துடன் இந்த கட்சிகள் அரசாங்கங்களில் அங்கம் வகித்து தமது சுயாதீனத்தை இழந்ததின் மூலம் மக்கள் செல்வாக்கை இழந்துள்ளதுடன், அமைப்பு ரீதியிலான பலத்தையும் இழந்துள்ளன. முன்பு இக்கட்சிகளுக்கு நாடு தழுவிய ரீதியில் கட்சி கிளைகள், வாலிபர் சங்க கிளைகள், தொழிற்சங்க கிளைகள், விவசாய சங்க கிளைகள், மாதர் சங்க கிளைகள், மாணவர் அமைப்பு கிளைகள், கலை இலக்கிய அமைப்புகள் என பல்வேறு அமைப்புகள் இருந்தன. தற்பொழுது அவற்றில் ஒன்றிரண்டே எஞ்சியுள்ளன. சில அமைப்புகள் முற்றாக அழிந்துபோய் உள்ளன. உதாரணத்துக்கு கம்யூனிஸ்ட் கட்சிக்கு யாழ்ப்பாணத்தில் செயற்படும் ஒரு கட்சிக் கிளையோ அல்லது அலுவலகமோ கிடையாது.

முன்னைய காலங்களில் சிங்கள மொழியில் கம்யூனிஸ்ட் கட்சி 'அத்த' என்ற தினசரிப் பத்திரிகையையும், தமிழிலும் சிங்களத்திலும் 'தேசாபிமானி' என்ற அரசியல் தத்துவார்த்த பத்திகையையும் வாரந்தோறும் வெளியிட்டு வந்தது. அதேபோல ஆங்கிலத்தில் 'போர்வேர்ட்' என்ற வாரப்பத்திரிகையை வெளியிட்டு வந்தது. சமசமாஜக் கட்சியும் 'ஜனதின' என்ற பெயரில் சிங்களத்தில் ஒரு தினசரி பத்திரிகையை வெளியிட்டு வந்தது. இன்று இவ்விரு கட்சிகளுக்கும் பத்திரிகைகளோ அல்லது வேறு பிரச்சார சாதனங்களோ கிடையாது. குறைந்தபட்சம் இணையத்தளங்கள் கூடக் கிடையாது.

இந்த இரு கட்சிகளும் தேர்தல்களில் நேரடியாக தமது வேட்பாளர்களை நிறுத்தி வெற்றிபெறக் கூடிய நிலையில் இன்று இல்லை. அவ்வளவு தூரம்

**தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...**

# சுயசார்பு இந்தியா சாத்தியமா?

சீனாவுக்கும் இந்தியாவுக்குமான எல்லைப் பகுதியில் நடைபெறும் மோதல்களும் கொரோனாவும் சீனத் தயாரிப்புகளை இந்தியா சார்ந்திருப்பது குறித்த கேள்விகளை மறுபடியும் எழுப்பியுள்ளன. 2019–20-ல் சீனாவிலிருந்து இந்தியாவுக்கு 4.92 லட்சம் கோடிக்கு இறக்குமதி நடைபெற்றது. இதே காலகட்டத்தில் இந்தியாவிலிருந்து சீனாவுக்கு 1.20 இலட்சம் கோடிக்கு மட்டுமே ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. மத்திய அமைச்சர் நிதின் கட்கரி கடந்த மாதம் கூறியதுபோல இந்தக் கொள்ளை நோயானது இந்தியாவிலே உற்பத்தி செய்வதற்கு ஒரு வாய்ப்பைத் தந்திருக்கிறது என்பது உண்மைதானா? சீனாவிலிருந்து வெளிநாட்டு நிறுவனங்கள் வெளியேறி இந்தியாவுக்கு வருமா? பிஸ்வஜித் தார் (Biswajit Dhar), அமிதேந்து பாலித் (Amitentu Palit) ஆகியோருடன் நடத்திய விவாதத்திலிருந்து...

**‘இந்தியாவிலேயே உற்பத்தி செய்வோம்’ (Made in India) திட்டம் முன்னெடுக்கப்பட்டு ஐந்து ஆண்டுகள் ஆகின்றன. சீனாவை எந்த அளவுக்கு இந்தியா சார்ந்திருக்கிறது என்பதைப் பார்க்கும்போது, நாம் தற்போது எந்த அளவுக்கு முன்சென்றிருக்கிறோம்?**

*பிஸ்வஜித் தார்:* நமது உற்பத்தித் துறை மறுபடியும் சரியான திசையில் செல்வதற்கு ‘இந்தியாவிலேயே உற்பத்தி செய்வோம்’ முன்னெடுப்பு சரியான வாய்ப்பாக இருந்தது. ஆனால், கடந்த 5 ஆண்டுகளில் நாம் சீனாவைச் சார்ந்திருப்பதுதான் அதிகரித்தது. சீனாவுக்குக் கச்சாப் பொருட்களையும், உற்பத்திநிலையின் இடைப்பட்ட பொருட்களையும் இந்தியா அனுப்பிக்கொண்டிருக்கிறது. முழுமை பெற்ற பொருட்களை சீனாவிலிருந்து இறக்குமதி செய்துகொண்டிருக்கிறது. சீனாவை நாம் அளவுக்கதிகமாகச் சார்ந்திருப்பதால், நம்மால் சொந்தக் காலில் நிற்க முடியும் என்று தோன்றவில்லை.

*அமிதேந்து பாலித்:* இந்தியா மிகச் சில நாடுகளிலிருந்தே இறக்குமதி செய்து கொண்டிருக்கிறது. எடுத்துக்காட்டாக, கொரோனாவுக்கு எதிரான போராட்டத்தின் முன்களப் பணியாளர்களுக்கான முகக் கவசங்கள், கவச உடைகள் உள்ளிட்டவற்றை



Biswajit Dhar



Amitentu Palit

இந்தியா பெரும்பாலும் சீனாவிலிருந்துதான் இறக்குமதி செய்கிறது. இந்தச் சார்புநிலையிலிருந்து வெளியேறி, பிற கூட்டாளிகளைத் தேடிக்கொள்ளும் வாய்ப்பு இந்தியாவுக்கு மிகவும் குறைவே.

**சீனாவைச் சார்ந்திருக்கும் நிலை எந்தெந்தத் துறைகளிலெல்லாம் அதிகம்?**

*அமிதேந்து பாலித்:* மூலப்பொருட்களைப் பொறுத்தவரை இந்திய உற்பத்தித் துறையானது சீனாவையே சார்ந்திருக்கிறது. மின்பொருட்கள் உட்பட பல வகையான இயந்திரங்கள், அரை மின்கடத்திகளால் இயங்கும் இயந்திரங்கள் என்று பலவற்றையும் இது உள்ளடக்கும். உரங்களையும் சீனாவிலிருந்து இறக்குமதி செய்கிறோம். அதேபோல், இன்று சந்தையில் வெள்ளமெனப் பாய்ந்திருக்கும் பொருட்கள் பலவும் சீனப் பொருட்களே.

**1990-களில் சீனா செய்ததை நாம் இப்போது பின்பற்ற வேண்டும் என்று கூறப்படுகிறது. ஆனால், தற்போதைய உலகத் தொழிற்சூழல் – குறிப்பாக, மதிப்புக்கூட்டுச் சங்கிலித் தொடர் (value chain) எப்படி இருக்கிறது?**

*பிஸ்வஜித் தார்:* உலக அளவில் மதிப்புக்கூட்டுச் சங்கிலித் தொடர்கள் இன்று மிகவும் மாறுபட்டதாக இருக்கின்றன. நாடுகள் சர்வதேசச் சந்தையைச் சார்ந்திருப்பதைவிட உள்ளூர் பொருளாதாரத்தையே சார்ந்திருப்பவையாக மாறியிருக்கின்றன. இது 2008-ல் ஏற்பட்ட மிகப் பெரிய பொருளாதார மந்தநிலையின் விளைவு. ஆக, 1990-களில் சீனா பின்பற்றிய உத்தி தற்போது இந்தியாவுக்குப் பொருந்தாது.

**சீனாவிலிருந்து தொழில் நிறுவனங்கள் வெளியேறி, தெற்காசிய நாடுகளை நோக்கிச் செல்வதைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். நம்மால் முடிந்த அளவு அந்த நிறுவனங்களை ஈர்ப்பதற்கு என்னென்ன உத்திகள் வகுக்க வேண்டும்?**

*பிஸ்வஜித் தார்:* சீனாவில் சென்று குவியும் அந்நிய நேரடி முதலீடுகளுக்கும், இந்தியாவுக்கு வரும் அந்நிய நேரடி முதலீடுகளுக்கும் இடையே ஏன் பெரிய இடைவெளி நிலவுகிறது என்று நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டும். திறந்த சந்தையைக் கொண்டிருந்தாலும் ஏன் மிகக் குறைவான முதலீடுகளையே நாம் ஈர்க்கிறோம் என்றும் கேட்டுக்கொள்ள வேண்டும். ‘இந்தியாவிலேயே உற்பத்தி செய்வோம்’ திட்டமானது உற்பத்தியில் அந்நிய முதலீடுகளை அனுமதிப்பது குறித்துப் பேசியது. ஆனால், தரவுகளைப் பார்த்தால், பெரும்பாலானோர் சேவைத் துறைகளையே தேர்ந்தெடுத்திருப்பது தெரியவரும். குறிப்பாக, தகவல்தொடர்புத் துறை. ஏனைய துறைகளில் காணப்படும் திறனின்மையே அவற்றை வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தேர்ந்து எடுக்காததற்குக் காரணம். அடுத்ததாக, அடிப்படைக் கட்டமைப்பு. நம்மிடம் உள்ள பல துறைமுகங்கள் பழையதாகிவிட்டன. இன்னும் பல கோளாறுகள் வேறு. இதுபோன்ற விஷயங்களில் சீனா நம்மைவிட பல

படிகள் முன்னே உள்ளது. ஆகவேதான் அந்நிய முதலீட்டாளர்கள் சீனாவையே அதிகம் தேர்ந்தெடுக்கிறார்கள்.

**தொழிலாளர் சட்டங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அடிக்கடி குரலெழுப்பப்படுகிறது. தொழிலாளர்களை வேலைக்கு எடுப்பதும் வேலையை விட்டு நீக்குவதும் சுலபமாக இருக்க வேண்டும் என்றும் புகார்கள் வருகின்றன அல்லவா?**

*பிஸ்வஜித் தார்:* தொழிற்சாலைகள் தொழிலாளர்களை வேலைக்கு எடுப்பதும் எளிதாகத்தானே இருக்கிறது? கொரோனா நாம் அனைவருக்கும் கற்றுக்கொடுத்த பாடம் ஒன்று உண்டெனில், இந்தியாவில் கிட்டத்தட்ட தொழிலாளர் சட்டங்களே இல்லை என்பதுதான். புலம்பெயர் தொழிலாளர்கள் தங்கள் சொந்த ஊருக்குத் திரும்பியது இந்தப் பிரச்சினையால்தான். நமது தொழிலாளர் சட்டத்தில் நெகிழ்வுத்தன்மை வேண்டும் என்பது மீண்டும் மீண்டும் முன்வைக்கப்படும் தவறான வாதம். இந்தியாவில் இருப்பதைவிட அதிகமான நெகிழ்வுத்தன்மையை வேறெங்கும் பார்க்கவே முடியாது.

**தென்கிழக்கு ஆசியாவின் மற்ற நாடுகளைவிட இந்தியாவிடம் உள்ள சாதகமான அம்சம் என்பது அதன் மிகப் பெரிய சந்தை. அதை நாம் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள முடியுமா?**

*பிஸ்வஜித் தார்:* 2008-ல் ஏற்பட்ட பொருளாதார மந்த நிலைக்குப் பிறகு, நாடுகள் தங்கள் உள்நாட்டுச் சந்தையை நம்பியிருக்க வேண்டி வந்தது. ஆனால், உள்நாட்டுச் சந்தையைப் போதுமான அளவுக்கு நாம் பயன்படுத்திக் கொள்ளவில்லை. இதனால், வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்ததும், உள்நாட்டுச் சந்தை சுருங்கிப்போனதும்தான் நடந்தது. கரோனா பரவுவதற்கு முன்பே நமது வளர்ச்சி வீழ்ச்சியடைந்து கொண்டிருந்தது. எதுவாக இருந்தாலும், நமது சொந்தச் சந்தையை உருவாக்க வேண்டும் என்றால், போதுமான அளவு கேட்பும் (demand) நுகர்வும் இருக்க வேண்டும். இதற்கு உத்தரவாதப்படுத்தவில்லை என்றால், வெளிநாட்டு முதலீட்டாளர்கள், உள்நாட்டு முதலீட்டாளர்கள் இரு தரப்புக்கும் நாம் பிரச்சினை ஏற்படுத்துகிறோம் என்று அர்த்தம்.

**உலக அளவில் பெரிய பொருளாதார சக்தியாக வர வேண்டும் என்று இந்தியா விரும்புகிறது. அதே நேரத்தில், வர்த்தக ஒப்பந்தங்களின் ஆபத்தையும் இந்தியா உணர்ந்திருக்கிறது. இதில் முரண்பாடு ஏதும் இருக்கிறதா?**

*அமிதேந்து பாலித்:* உலக வர்த்தகத்துக்கும் பிராந்திய வர்த்தகத்துக்கும் ‘உலக வர்த்தக நிறுவனம்’ (டபிள்யு.டி.ஓ.) சிறப்பான விதிமுறைகளைக் கொண்டிருக்கிறது. துரதிர்ஷ்டவசமாக, இந்த நிறுவனத்தின் இயக்கத்தில் பிரச்சினைகள் இருப்பதுடன் பல்வேறு நாடுகளுக்கு இது உவப்பாகவும் இல்லை. ஆகவே, அவை பிராந்திய ஒப்பந்தங்களையும் இரு தரப்பு ஒப்பந்தங்களையும் செய்துகொள்கின்றன. வர்த்தக ஒப்பந்தங்களுக்கு இந்தியா உடன்பட்டு நடக்கப்போகிறதா இல்லையா என்பது இந்தியா பதிலளிக்க வேண்டிய கேள்வி. இதில் இரண்டு அம்சங்கள் உள்ளன – சீனாவைச் சார்ந்திருக்கும் நிலையைக் குறைத்தல், ஏனைய நாடுகளைச் சார்ந்திருப்பதையும் குறைத்தல். சீனச் சார்பைக் குறைப்பது மட்டும் ஒரு வகையான விளைவுகளைக் கொண்டிருக்கிறது என்றால், ஏனைய உலக நாடுகளைச் சார்ந்திருக்கும் நிலையைக் குறைத்தால், நாம் பொருளாதார தேசியத்தை நோக்கிச் செல்கிறோம் என்று அர்த்தம்.

*பிஸ்வஜித் தார்:* நாம் பொருளாதாரத் தேசியத்தை நோக்கிப் போவதற்கான தெளிவான சமிக்ஞைகள் வெளிப்பட்டுவருகின்றன. இந்தியா ‘உள்நாட்டுத் தொழில்காப்புக் கொள்கை’யை (புரொட்டக்ஷனிஸம்) அதிக அளவில் பின்பற்ற ஆரம்பித்திருக்கிறது. உள்நாட்டுப் பொருட்களையே வாங்க வேண்டும், இறக்குமதி செய்யப்படும் பொருட்களைத் தவிர்க்க வேண்டும் என்று பெரும்பாலான அமைச்சர்கள் கூறுகிறார்கள். அது மிகவும் கவலையளிப்பது. எல்லாவற்றிலும் இந்தியமயமாக்க வேண்டும் என்று பேச ஆரம்பித்தோம் என்றால், இறக்குமதிக்கான மாற்றுப்பாதையில் நாம் போக முயல்கிறோம் என்று அர்த்தம். இந்தக் காலத்தில் அதை நாம் செய்யவே முடியாது. இதில் நிறைய நடைமுறைப் பிரச்சினைகள் உள்ளன. இந்தப் பாதையில் செல்ல வேண்டுமானால், பெரிய அளவிலான வளங்களை நாம் திரட்ட வேண்டும். அவ்வளவு வளங்கள் இந்தியாவிடம் இல்லை. இப்படிப்பட்ட முரணான சமிக்ஞைகள் காரணமாக இந்தியாவில் தொழில்புரிய நினைக்கும் முதலீட்டாளர்களுக்கு சாதகமான சூழ்நிலை நிலவாது. ஒருபக்கம், அமெரிக்காவுடன் ‘சுதந்திரமான வர்த்தக ஒப்பந்தம்’ (எஃப்.டி.ஏ.) செய்துகொள்ள வேண்டும் என்று கோருபவர்கள் இருக்கிறார்கள். இன்னொரு பக்கம், பொருளாதார தேசியத்துக்காக வலுவாகக் குரல் எழுப்புபவர்கள் இருக்கிறார்கள். கொள்கைகள் கணிக்கப்படக் கூடியவையாகவும் வெளிப்படையாகவும் இருப்பது தற்காலத்தில் எந்த நாட்டுக்கும் முக்கியமானதாகும். நம்மிடம் இரண்டுமே இல்லை. சில வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் நான் பேசிவருகிறேன். இங்கே என்ன நடக்கிறது என்பது குறித்து அவர்களுக்கு உண்மையிலேயே எதுவும் தெரியவில்லை. இப்படிச் சமாளித்துக் கொண்டிருப்பதுதான் இனி புதிய இயல்பாக ஆகவிருக்கிறது.

**பேட்டி கண்டவர்: ஆனந்த் கிருஷ்ணன்**

*- பிஸ்வஜித் தார், பொருளாதார ஆய்வுகள் மற்றும் திட்டத்துக்கான மையத்தின் பேராசிரியர், ஜவாஹர்லால் நேரு பல்கலைக்கழகம்*

*- அமிதேந்து பாலித், தெற்காசிய ஆய்வுகளுக்கான மையத்தின் பேராசிரியர், சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம்.*

**நன்றி: இந்து தமிழ்**

---

## *பிரதிபலிப்பு*

நான் வெடிமருந்து வாங்கிக் கொடுக்கவில்லை
வாங்கிக் கொடுக்கும் யோசனையும்
எனக்கில்லை
எறும்புப்புற்றை உதைத்தழித்தது
உங்கள் வலுத்த கால்கள்தான்
மிதித்த புற்றில் விதைக்கப்பட்ட
வேட்கைக்கும் நீங்களே காரணம்

உங்கள் தடித்த லத்தி தாக்கிச்
சரிந்தது தேன்கூடு
இப்போது ரௌத்திர தேனீக்களின் ரீங்காரத்தில்
படபடத்துச் சிவந்து கிடக்கிறது உங்கள் முகம்

மக்கள் நெஞ்சில் எழுந்த வெற்றி முழக்கம்
ஓரிடத்தில் எழுவதாய்
ஒருவனால் எழுவதாய்
உங்கள் துப்பாக்கிகளைத் தயார்செய்தீர்கள்
அதனாலேயே
எங்கெங்கிருந்தும் புரட்சி முழக்கம் எழும்பும்
இனி!

– கவிஞர் வரவர ராவ்

8ம் பக்கத்தொடர்ச்சி…

சிவநேசதுரை சந்திரகாந்தன் சிறையிலிருந்து கொண்டே அதிகூடிய அதிகூடிய விருப்பு வாக்குகளுடன் வெற்றி பெற்றமையாகும். பிள்ளையானின் கட்சி மட்டக்களப்பு மாவட்டத்தில் பெற்ற வாக்குகள் அங்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு பெற்ற வாக்குகளுக்கு அண்மித்ததாக இருப்பது ஒரு குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகும்.

வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்புதான் இதுவரை காலமும் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதி என மார்தட்டி வந்தது. அந்த நிலைக்கு இந்தத் தேர்தலில் சாவுமணி அடிக்கப்பட்டுள்ளது. அதாவது, இந்த இரு மாவட்டங்களிலும் மாற்றுக் கட்சிகள் வெற்றி பெற்றிருப்பதை ஒரு சிறிய மாற்றமாகக் கொள்ளலாம். அதேநேரத்தில் இன்னொரு விடயத்தையும் சுட்டிக்காட்டுவது அவசியம். தமிழ் இனவாத தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் அதனை ஒத்த கட்சிகளுக்கும் எதிரான சக்திகள் தமக்குள் ஒரு ஐக்கியத்தை உருவாக்கத் தவறியதால் மேலும் ஒருசில உறுப்பினர்களைப் பெறக்கூடிய வாய்ப்பு இழக்கப்பட்டுள்ளது.

இனிமேலாவது மாற்று தமிழ் அரசியல் சக்திகள், அதாவது தமிழ் முற்போக்கு – ஜனநாயக சக்திகள் தமக்குள் ஒரு பொது வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஐக்கியத்தை உருவாக்கி பரந்துபட்ட முன்னணியாகச் செயல்படுவது காலத்தின் தேவையாகும். இல்லாவிடின் தொடர்ந்தும் தமிழ் பறிபோக்கு சக்திகளே கோலோச்சும் நிலை தொடரும்.

# சிறுவர் போராளிகள் தொடர்பாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஒருபோதும் எந்த கவலையும் காட்டவில்லை: பிரபு நேசபி

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதற்காக பிரித்தானியாவில் சட்ட நடவடிக்கைகளைத் தொடங்கிய நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் (Transnational Government of Tamil Eelam -TGTE), சிறுவர் போராளிகள் தொடர்பாக ஒருபோதும் எந்த விதமான கவலையையும் காட்டவில்லை என அனைத்து கட்சி பிரித்தானிய இலங்கை நாடாளுமன்றக் குழுவின் தலைவர் பிரபு நேசபி (Lord Naseby) தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவின் பிரபுக்கள் சபையில் உலக மனித உரிமைகள் தடைகள் விதிகள் 2020 மீதான விவாதத்தின் போது பேசிய பிரபு நேசபி, தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதற்காக பிரித்தானியாவின் நீதிமன்றங்களில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் 29.07.2020 இல் ஒரு சட்ட நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது என்றார்.

அவர் மேலும் கூறியதாவது: “துக்கத்துடன் 2001 ஆம் ஆண்டில் நாங்கள் தடை செய்த விடுதலைப் புலிகள் மீது நான் கவனம் செலுத்த விரும்புகிறேன். புலிகளை பின் தொடர்ந்து வந்த நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ளது. முன்னாள் புலிகள் உறுப்பினர்களால் இது நிர்வகிக்கப்பட்டும் ஒழுங்கமைக்கப்பட்டும் உள்ளது.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் சித்தாந்தமானது கிட்டத்தட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சித்தாந்தத்தை ஒத்ததாக இருக்கின்றது. இது ஒருபோதும் புலிகளின் வன்முறை அல்லது பயங்கரவாதத்தை



Lord Naseby

கண்டனம் செய்ததில்லை. இது இளைஞர்களை, முக்கியமாக தமிழர்களை குறிவைத்து, புலிகளை நினைவுகூரும் நிகழ்வுகளில், புலிகளின் கொடிகளை அசைத்தும், கறுப்புப்புலி, மற்றும் இன்னோரன்னவற்றை இலக்காகக் கொண்டும் உலகெங்கும் பிரச்சாரம் செய்து வருகின்றது.

சிறுவர் போராளிகள் தொடர்பாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஒருபோதும் எந்த விதமான வருத்தத்தையும் காட்டவில்லை என்பதே எல்லாவற்றையும் விட மோசமானது என்று நான் நினைக்கிறேன். 31 ஜூலை 2005 அன்று, ஐக்கிய நாடுகள் சர்வதேச சிறுவர்கள் அவசர நிதியம் (யூனிசெப்) விடுத்த அறிகையில், 40% பெண்கள் 60% ஆண்களைக் கொண்ட 5,081 வயது குறைந்த போராளிகள் சேர்க்கப்பட்டதாகவும், இவர்களில் போரின் முடிவில், 594 என்ற குறைந்த எண்ணிக்கையிலான போராளிகளே எஞ்சியிருந்தனர் என்று தெரிவித்துள்ளது.

இன்னும், இந்த நாட்டில், சிறுவர் போராளிகளின் பிரதான ஆட்சேர்ப்பாளரும் பயிற்றுவிப்பாளருமாக இருந்த, பிரித்தானியாவில் வசதியான வதிவிடத்தைக் கொண்டிருக்கும் திருமதி பாலசிங்கமும் எங்களிடம் உள்ளார். இது நாம் எதிர்கொள்ள வேண்டிய ஒரு சவாலாக இருக்கின்றது”

11ம் பக்கத்தொடர்ச்சி…

பலவீனப்பட்டுப்போய் உள்ளன. அதனால் பிரதான கட்சிகள் போடும் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற பிச்சைக்காக காத்து இருக்கின்றன.

இவர்களது தவறான போக்கினாலும், செயற்படாத்தன்மையாலும்தான் ஜே.வி.பி. என்ற குட்டி முதலாளித்துவ சிங்கள இனவாத இயக்கம் இடதுசாரிப் போர்வையுடன் உலவ முடிகிறது.

இக்கட்சிகள் தொடர்ந்து உயிர் வாழ்வதானால் புதிய இரத்தம் பாய்ச்சப்பட வேண்டும். புதிய இரத்தம் என்பது பல வகைகளில் அமைய வேண்டும். கட்சிக் கிளைகளும் வெகுஜன அமைப்புகளும் புதுப்பிக்கப்பட வேண்டும். ஆரம்ப காலங்களில் செய்தது போல மார்க்சிச சித்தாந்த அரசியல் வகுப்புகளும், அரசியல் பொதுக்கூட்டங்களும் நடத்தப்பட வேண்டும். கட்சியின் கொள்கைகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்காக பத்திரிகைகளும் வேறு ஊடக

வலையமைப்புகளும் உருவாக்கப்பட வேண்டும். மக்களின் பிரச்சினைகளுக்காக வெகுஜன இயக்கங்களை நடாத்த வேண்டும். இளைஞர்களிடம் கட்சிப் பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டும்.

இவற்றையெல்லாம் செய்வதற்கு இந்த இரண்டு 'கிழட்டு' இடதுசாரிக் கட்சிகளும் தயாராக இருக்கின்றனவா? பொறுத்திருந்து பார்ப்பதைத் தவிர வேறு வழியில்லை.

---

**முன்பக்கத் தொடர்ச்சி...**

கடைப்பிடிப்பதன் மூலமே இந்தப் பிரச்சினையைச் சரியாகக் கையாள முடியும்.

அதேநேரத்தில், நான்கரை ஆண்டுகளாக ஐ.தே.க. அரசுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கியும் தமிழ் மக்களின் ஒரு சாதாரண பிரச்சினையைக் கூட அந்த அரசைக் கொண்டு தீர்த்து வைக்க லாயக்கில்லாமல் போன தமிழ் தேசியக் கூட்டமைப்பு, மீண்டும் தனது பழைய பல்லவியை பாட ஆரம்பிக்கலாம். அதாவது, ராஜபக்சாக்களின் அரசு தமிழர்களுக்கு எதிரானது, சிங்கள இனவாத அரசு எனக் கூப்பாடு போடுவார்கள்.

ஏற்கெனவே அதற்கான முன்னேற்பாடுகளைக் கூட்டமைப்பினர் ஆரம்பித்துவிட்டனர். தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டதும் அது பற்றி கருத்து வெளியிட்ட கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், பொதுஜன பெரமுனவின் வெற்றி பணம் கொடுத்தும் சாராயம் கொடுத்தும் பெறப்பட்ட வெற்றி என ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டார். மற்றைய பிரதான கட்சிகளான ஐ.தே.கவோ, ஜே.வி.பியோ, தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளோ சொல்லாத ஒரு குற்றச்சாட்டை சம்பந்தன் கண்ணை மூடிக்கொண்டு சொன்னதின் மூலம் இலங்கை மக்களின் ஜனநாயகச் செயல்பாட்டை சம்பந்தன் மிக மோசமாகக் கொச்சைப்படுத்தி இருக்கிறார். இப்படி பச்சைப் பொய் சொன்னவர்கள் எதிர்காலத்தில் அரசுக்கெதிராக என்னென்ன பொய்ப் பிரச்சாரங்களைச் செய்வார்கள் என்பது சொல்லத் தேவையில்லை.

கூட்டமைப்பினரின் ஆயுதம் வழமைபோல இனப்பிரச்சினையாகத்தான் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அதையும் அவர்கள் ஏற்கெனவே ஆரம்பித்துவிட்டனர். மாகாண சபை முறைமை தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வல்ல என்று சொல்லும் தமிழ் தேசியவாதிகள், இப்பொழுது வேறு வகையான பொய்ப் பிரச்சாரம் ஒன்றைச் செய்கின்றனர். அதாவது, அரசாங்கம் கொண்டுவர உத்தேசித்துள்ள 20ஆவது திருத்தத்தில் 13ஆவது திருத்தத்தை இல்லாதொழித்து, அதன் மூலம் மாகாண சபைகளை இல்லாமல் செய்வதற்கு திட்டமிட்டுள்ளதாக தமிழ் தேசியவாதிகள் சிலர் பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றனர். ஆனால் மாகாண சபைகளுக்கான தேர்தல் விரைவில் நடைபெறும் என அரசாங்கம் தெரிவித்துள்ளதால் தமிழ் தேசியவாதிகளின் பிரச்சாரம் பிசுபிசுத்துப் போய்விட்டது. ஆனாலும் அரசாங்கம் இந்த விடயத்தில் ஆக்கபூர்வமாகச் செயல்படுவது அவசியம். அதாவது அரசாங்கம் அறிவித்துள்ளபடி மாகாண சபைகளுக்கான தேர்தலை விரைவில் நடத்த வேண்டும்.

ஏனெனில் தமிழரசுக் கட்சி நீண்ட காலமாக இனப் பிரச்சினைக்குத் தீர்வாக சமஸ்டி முறையை வலியுறுத்தி வந்தது. பின்னர் 1976இல் வட்டுக்கோட்டையில் மாநாடு கூட்டி தமிழர்களின் பிரச்சினைக்கு தனிநாடுதான் தீர்வு எனத் தீர்மானம் நிறைவேற்றியது. அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் தமிழ் இளைஞர்களால் ஆரம்பிக்கப்பட்ட ஆயுதப் போராட்டம் 2009 மே மாதம் வரை நடைபெற்று தோல்வியில் முடிந்தது.

மறுபக்கத்தில் இனப் பிரச்சினைத் தீர்வுக்காக இலங்கை அரசுக்கும் தமிழர் தரப்புக்கும் இடையில் 1957 முதல் பல ஒப்பந்தங்களும் செய்யப்பட்டன. ஆனால் எந்தவொரு ஒப்பந்தமும் நிறைவேற்றப்படவில்லை.

இந்த நிலைமையில்தான் இந்திய அரசின் நிர்ப்பந்தத்தால் 1987இல் இந்திய - இலங்கை ஒப்பந்தம் எழுதப்பட்டு, அதன் அடிப்படையில் இலங்கை அரசியல் யாப்பில் 13ஆவது திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, அதன் அடிப்படையில் மாகாண சபைகள் அமைக்கப்பட்டு இயங்க ஆரம்பித்தன. இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக செய்யப்பட்ட ஒப்பந்தங்களில் இந்த ஒப்பந்தம் மட்டுமே நடைமுறைப்படுத்தப்பட்ட ஒன்றாக இருக்கின்றது.

இந்த ஒப்பந்தம் இலங்கைத் தமிழர்களின் அபிலாசைகளை முழுமையாக பிரதிபலிக்காவிட்டாலும், தமிழர்களின் பல தேவைகளை நிறைவேற்றக்கூடிய ஒன்றாக இருப்பதுடன், நிரந்தரத் தீர்வு ஒன்றை நோக்கிச் செல்வதற்கான அடிப்படையாகவும் இருக்கின்றது. எனவே மாகாண சபை முறைமையைப் பாதுகாப்பதும், அதை வளர்த்துச் செல்வதும் முக்கியமானதாகும்.

இந்த விடயத்தில் இலங்கை அரசுக்கு ஒரு முக்கியமான ஒரு கடமை உண்டு. அதாவது விரைவில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதுடன், மாகாண சபைகளுக்கான முழுமையான அதிகாரங்களையும் குறித்துரைக்கப்பட்டபடி வழங்க வேண்டும்.

ஏனெனில், சமஸ்டி கோரி, பின்னர் தனிநாடு கோரிய தமிழர்களுக்கு, மாகாண சபைகளினூடாகத்தன்னும் அதிகாரங்களைப் பங்கிட்டளிக்காவிடின், அவர்களது எதிர்பார்ப்பு ஏமாற்றத்தில் முடிந்துவிடும். அப்படி ஏமாற்றம் ஏற்படும் பட்சத்தில் அவர்களுக்கு மீண்டும் தனிநாட்டுக்கான சிந்தனை ஏற்பட வாய்ப்புண்டு. அப்படி இனிமேல் ஏற்பட வாய்ப்பில்லை என யாராவது வாதிட்டால், அது மக்களின் உளவியலை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை என்றே அர்த்தம்.

எனவே, நாட்டில் மீண்டும் பிரிவினைவாதம் தலைதூக்கி, அதனால் மீண்டும் நாட்டில் பேரழிவு ஏற்படுவதைத் தடுக்க வேண்டுமானால் அரசாங்கத்துக்கு முன்னால் தற்போதைக்கு இருக்கக்கூடிய ஒரே வழி, மாகாண சபைகளுக்கான தேர்தலை விரைந்து நடத்துவதும், அவற்றுக்கான அதிகாரங்களை இனியும் கால தாமதம் செய்யாமல் வழங்குவதும்தான்.

தேர்தல் வெற்றி என்ற மமதையில் இறுமாந்து அரசாங்கம் நாடு எதிர்நோக்கும் பாரிய பிரச்சினைகளில் ஒன்றான தமிழ் மக்களின் பிரச்சினைத் தீர்வுக்கு கவனம் செலுத்தாமல் இருக்குமானால் அது இறுதியில் விபரீதத்தில் போய் முடியலாம். எனவே, அரசாங்கம் சரியான திசை வழியில் தீர்க்கதரிசனத்துடனும் அர்ப்பணிப்புடனும் செயல்படுவது அவசியம்.

---

## அரசியலமைப்பு மீதான ஜே.ஆரின் உத்தரவாதம் உடைந்தது

தமது அரசியலமைப்பு நிரந்தரமானது என்றும், அதை மாற்ற முடியாது என்றும் மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவின் திட்டவட்டமான எண்ணக்கரு, 'கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் மகிந்த ராஜபக்ஷவினதும்' ஒத்திசைவின் மூலம், பொய்த்துப்போனது என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அமைச்சின் புதிய கல்வி அமைச்சராக பேராசிரியர் பீரிஸ் பொறுப்பேற்றிருந்த வேளையில், மறைந்த ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன, சூரியன் மற்றும் சந்திரன் இருக்கும் வரை, தனது அரசியலமைப்பை யாராலும் மாற்ற முடியாது என பிரகடனம் செய்ததாகத் தெரிவித்தார்.

'ஜே.ஆரின் உறுதி தவறு. எங்கள் அரசு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெற்றுள்ளது. மாற்றமுடியாத, என்றென்றும் நிரந்தரமாக இருக்கக் கூடிய சட்டங்களை யாராலும் உருவாக்க முடியாது' என்று அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

# கடந்த ஆட்சியாளர்கள் நிராகரிக்கப்பட்டதை தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன: அமெரிக்க தூதர்

பொதுத் தேர்தல் முடிவுகள் கடந்த ஆட்சியாளர்கள் நிராகரிக்கப்பட்டதை எடுத்துக்காட்டுகின்றன என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்த அமெரிக்க தூதுவர் அலைனா ரெப்ளிற்ஸ் (Alaina Teplitz) கூறியதாக, பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தேர்தல் சுதந்திரமானதாகவும் நீதியானதாகவும் மற்றும் அமைதியானதுமான முறையில் நடாத்தப்பட்டதாகவும், தேர்தல் முடிவுகள் "முந்தைய நிர்வாகத்தின் நிராகரிப்பை" காட்டுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டதாக ஊடகப்பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

"புதிய அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றுவதை நாங்கள் எதிர்பார்க்கிறோம்", என அமெரிக்கத் தூதுவர் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் பிரதமரைச் சந்தித்தபோது, வெற்றிகரமான தேர்தல் பிரச்சாரத்திற்காக அவரை வாழ்த்திக் கூறினார்.

கோவிட்–19 தடுப்பு நடவடிக்கைகள் குறித்து கருத்து தெரிவித்த தூதுவர், கோவிட்–19 வைரஸ் பரவலை கையாள்வதில் அரசு நிச்சயமாக பாராட்டப்பட வேண்டும் என்பதுடன் இது "பெரியதாரு வெற்றியின் கதை" என்றும் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், தனியார் துறையில் இலங்கையர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு உதவியளிப்பது உள்ளடங்கலாக, இலங்கை – அமெரிக்க பொருளாதார உறவு அமெரிக்காவுக்கு முன்னுரிமையாக உள்ளது.

புதிய அரசாங்கத்தின் முன்னுரிமைகள் குறித்து பிரதமரிடம் கேட்கப்பட்ட போது, தற்போது கோவிட்–19 தொற்று நோயின் தாக்கத்தின் காரணமாக பொருளாதார மீட்சியே பிரதான முன்னுரிமை என பிரதமர் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புக்களை சிறந்த முறையில் தயார் செய்யும் வகையில், நாடு முழுவதும் தொழில் பயிற்சி மையங்களை



Alaina Teplitz

நிறுவுவதற்கு, இலங்கைக்கு அமெரிக்கா உதவி செய்ய முடியும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

"பல வாய்ப்புகள் உள்ளன", "குறிப்பாக நன்கு படித்த தொழிலாளர் சக்தியுடன் இலங்கை வலுவான அனுகூலத்தினைக் கொண்டுள்ளது" என்றும் தூதர் ரெப்ளிற்ஸ் கூறியுள்ளார்

அபிவிருத்தித் துறை பற்றி கலந்துரையாடும் போது, மக்களின் சில குறிப்பிட்ட துறைகள் மற்றும் நாட்டின் சில பகுதிகளில் அடிப்படை வசதிகள் இல்லை என பிரதமர் ராஜபக்ஷ தூதுவரிடம் தெரிவித்தார்.

நாட்டின் சில பகுதிகளில் சுத்தமான குடிநீர் தேவை என்பதை பிரதமர் கோடிட்டுக் காட்டினார். அசுத்தமான குடிநீர் கடுமையான சிறுநீரக நோய்க்கு முக்கிய காரணம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கைக்கு புதிய முதலீடுகளைக் கொண்டு வருதல், ஜனநாயக நிறுவனங்களுக்கும் ஆட்சி தொடர்பான திட்டங்களுக்கும் ஆதரவு வழங்குதல், பயங்கரவாத எதிர்ப்பு, மக்கள் மற்றும் போதைப் பொருட்கள் கடத்தல், நாடுகடந்த குற்றங்களைக் கையாளுதல் போன்ற விடயங்களில் விசேட கவனம் செலுத்தி, பாதுகாப்புத் துறையில் ஒத்துழைப்பது என்பதை உள்ளடக்கிய ஏனைய விடயங்களும் கலந்துரையாடப்பட்டன.

# இரணைமடுவில் சட்டவிரோத மணல் அகழ்வை தடுக்கக் கோரி போராட்டம்

இரணைமடு குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுவரும் சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு இரணைமடு விவசாய சம்மேளனம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்துமாறு 25.08.2020 இல் இரணைமடு விவசாய சம்மேளனத்தினால் கவன ஈர்ப்பு போராட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டது. கரைச்சி பிரதேச சபை முன்பாக இருந்து ஆரம்பிக்கப்பட்ட கவனயீர்ப்பு பேரணி, கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு சென்று அரசாங்க அதிபருக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

போராட்டத்தில் இரணைமடு விவசாய சம்மேளனத்தின் கீழுள்ள கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது இரணைமடு விவசாய சம்மேளனத்தின் செயலாளரும் கரைச்சி பிரதேச சபை உறுப்பினருமான எம்.சிவமோகனிடம்,

'கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலம் தொட்டே குறித்த பகுதியில் மணல் அகழ்வு ஆரம்பித்துவிட்டது. அக்காலப்பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவராகவும் இருந்தார். அப்போது கட்டுப்படுத்த முடியாது போன மணல் அகழ்வை இப்போது கட்டுப்படுத்தலாம் என நம்புகின்றீர்களா?' என ஊடகவியலாளர் ஒருவர் அவரிடம் வினவியபோது,

'இக் காலப்பகுதியில் பொலிசாரின் கவன குறைவும், அவர்களின் செயற்பாடுமே கட்டுப்படுத்த முடியாது போனமைக்கான காரணமாகும். தற்போதுள்ள அதிகாரிகள் மற்றும் அரச தலைவர்கள் இவ்விடயத்தில் அதிகம் அக்கறை செலுத்துவதால் இக்காலகட்டத்தில் இதனை கட்டுப்படுத்த முடியுமென நம்புகின்றோம்' என அவர் பதிலளித்தார்